விலை: 50.00
viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 17 வெள்ளிக்கிழமை (03.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 349

## கொரோனா +735

(கொழும்பு)

கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 735 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் 15

## "ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல்" திறப்பு



15

### நெடுந்தீவு, அனலைதீவு மற்றும் நயினாதீவுக்கான

# சூரிய மின் திட்டத்தை இடைநிறுத்தியது சீனா

### இலங்கைக்கான சீனத் தூதரகம் டுவிட்

*(யாழ்ப்பாணம்)*

*யாழ்.மாவட்டத்துக்குட்பட்ட நெடுந்தீவு, அனலைதீவு மற்றும் நயினாதீவு ஆகிய மூன்று தீவுகளில் சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையத்தை அமைக்கும் வேலைத்திட்டத்தை சீனா இடைநிறுத்தியுள்ளது.*

*இலங்கையில் உள்ள சீனத் தூதரகம் தனது டுவிட்டர் தளத்தில் இந்தத் தகவலைப் பதிவு செய்துள்ளது.* *(15ஆம் பக்கம் பார்க்க)*


Chinese Embassy in Sri Lanka · 21h
Sino Soar Hybrid Technology, being suspended to build Hybrid Energy system in 3 northern islands due to 'security concern' from a third party, has inked a contract with Maldivian gov't on 29 Nov to establish solar power plants at 12 islands in .

### எரிவாயு வெடிப்பு
## முறைப்பாட்டு இலக்கங்கள் அறிமுகம்

(கொழும்பு)

எரிவாயு வெடிப்பு உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாடுகளை அறிவிக்க பொதுமக்களுக்கு 2 விசேட 15

## கொரோனா 27 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 27 பேர் கொரோனாவுக்கு பலியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 15

## கடினமான தீர்மானங்களை நாட்டுக்காக எடுக்கத் தயார்

### பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் எதிர்காலத்தை அடகு வைத்து கடினமான தீர்மானங்களை எடுக்கும் யுகத்தை அரசாங்கம் எதிர்கொண்டுள்ளதாக 15

## காணி உரிமையாளர்களுடன் வடக்கு ஆளுநர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - மாதகல் பகுதியில் கடற்படையினரின் பயன்பாட்டுக்கென அளவீடு செய்ய முற்பட்ட காணிகள் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களை 15



## யாழில் தொடர்ச்சியாக கரையொதுங்கும் சடலங்கள்

### நேற்றும் இரு சடலங்கள் கரையொதுங்கின ஒரு வாரத்தில் 6ஆவது சடலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கரையோரங்களில் குறிப்பாக வடமராட்சி கரையோரங்களில் தொடர்ச்சியாக சடலங்கள் கரையொதுங்கிவரும் நிலை 15

## இந்திய உயர்மட்ட அரசியல்வாதிகளுடன் நிதியமைச்சர் பசில் கலந்துரையாடல்

(புதுடில்லி)

இந்தியாவிற்கு இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்றும் உயர்மட்ட அரசியல்வாதிகள் பலரை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நேற்றும் இந்திய நிதியமைச்சர் கலாநிதி நிர்மலா சீதாராமனை அவர் சந்தித்துள்ளதுடன், வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 15

## ஆஸி உயர்ஸ்தானிகருடன் மாநகர முதல்வர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹொலி யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணனை 15



## நல்லூர் கோவில் வீதியிலும் எரிவாயு அடுப்பு வெடித்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நல்லூர் பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்து சிதறிய சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

நல்லூர் கோவில் வீதியில் உள்ள ஒரு வீட்டில் மதிய உணவு தயாரித்துக் கொண்டிருந்தபோது அடுப்பு எரிவதனை அவதானித்த வீட்டு உரிமையாளர் வெளி 15

### வவுனியாவிலும்
## எரிவாயு அடுப்பு வெடித்தது

(வவுனியா)

வவுனியா, வேரகம அரச ஊழியர்களுக்கான வீடமைப்புத் திட்டத்தில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் எரிவாயு அடுப்பு வெடித் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஒமிக்ரோன்" தொற்று ஏற்கெனவே நாடு முழுவதும் பரவியிருக்கலாம்

## பிரதி சுகாதார பணிப்பாளர் ஹேமந்த ஹேரத்

(கொழும்பு)

கோவிட்-19 "ஒமிக்ரோன்" வைரஸ் மாறு ஏற்கெனவே நாட்டிற்குள் நுழைந்திருக்கலாம் என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் ஹேமந்த ஹேரத் எச்சரிக்கின்றார்.

பொதுவாக எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் விமான நிலையத்தில் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் ஹேமந்த ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, ஒமிக்ரோன் வைரஸ் வகை ஏற்கெனவே நாட்டிற்குள் நுழைந்திருக்கலாம். இந்த மாறுபாட்டைக் கொண்ட நபர்கள் பெயரிடப்படவோ அல்லது கொடியிடப்படவோ இல்லை. மேலும் மரபணு வரிசைமுறைக்கு உட்பட்டாலன்றி மாறுபாட்டை எடுத்துச் செல்வதில் உறுதியாக இருக்க முடியாது. இந்த மாறுபாட்டை உடனடியாக அடையாளம் காண முடியாது. பரிசோதனை அதிக செலவானது. இது நேரத்தை எடுத்துக் கொள்ளும் செயலாகும்.

எனவே, அதிக ஆபத்துள்ள குழுக்கள் கண்டறியப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவின் பிசிஆர் மாதிரிகள் மரபணு பரிசோதனைக்கு அனுப்பப்படுகின்றன.

கூடுதலாக அனைத்து பொது நடவடிக்கைகளும் விமான நிலையங்களுக்குள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றார். (ம-3)


# கிழவன்காடு கலாமன்றம்

காரைநகர் — யாழ். கிளை

**கலைப் போட்டிகள் – 2021**

எமது கலாமன்றத்தில் கலைகளைப் பயின்றுவரும் மாணவர்களுக்கான கலைப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

**போட்டிகள்**

மனனப் போட்டி, மாலை கட்டுதல், கோலம் போடுதல், தோரணம் பின்னுதல்.

**காரைநகர் கிளை**

04.12.2021 சனிக்கிழமை கலாமன்ற மனோன்மணி மண்டபத்தில் முற்பகல் 9.00 மணி - 1.00 மணிவரை நடைபெறும்.

**யாழ். கிளை**

05.12.2021 ஞாயிற்றுக்கிழமை சைவ பரிபாலன சபை (நீராவியடி, யாழ்ப்பாணம்) முற்பகல் 8.00 மணி - 2.00 மணிவரை நடைபெறும்.

குறிப்பு :- போட்டிகள் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக நடைபெறும். போட்டிகளில் கலாசார உடை அணிந்து வருதல் வேண்டும்.

**ஏனைய கலைகளான பண்ணிசை, சங்கீதம், நடனம், மிருதங்கம், வயலின், வீணை, சித்திரம், ஒகன் என்பவை வழமையான வகுப்பு நேரத்தில் போட்டிகள் இடம்பெறும்.**

பதிவாளர்
காரைநகர்
077 015 6244

(C-3150)

பதிவாளர்
யாழ். கிளை
இல. 428, கே.கே.எஸ் வீதி.
077 578 6638


# கண்ணீர் அஞ்சலி



வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தின் நிர்வாகப் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி **உ. சாந்தினி** அவர்களின் பாசமிகு தந்தை

## அமரர் செல்லத்துரை பழனிவேல்

அவர்கள் நேற்று முன்தினம் (01.12.2021) புதன்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தோற்றம் :02.02.1943**
**மறைவு : 01.12.2021**

(C-3149)

பிரிவுத் துயருடன் **பிரதேச செயலாளரும் அனைத்து உத்தியோகத்தர்களும் ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



எழுதுமட்டுவாழ் விழுபளை அம்மன் கோவிலடியைச் சேர்ந்த

திருமதி

## கனகராசா சரஸ்வதி (கிளி)

திதி : சதுர்தசி

மலர்வு : 30.08.1947
உதிர்வு : 23.11.2021

" ஓடி உருண்டது உமைப்பிரிந்து பத்தாண்டு
வாடி வதங்குகின்றோம் உமைப்பிரிந்து எண்ணி நிதம்
பத்தாண்டென்ன பத்தாயிரம் ஆண்டுகள் சென்றாலும்
எம் நெஞ்சமதில் உங்கள் நினைவுகள் நிலைத்திருக்கும்"

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஒட்டுவெளி,
மிருசுவில்.

(8873)

நினைவுகளுடன்
**க. கனகேந்திரன்** குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



தோற்றம் 02 – 04 – 1941

மறைவு 02 – 12 – 2021

## சின்னர் சரவணமுத்து

பலாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னர் சரவணமுத்து அவர்கள் நேற்று (02.12.2021) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னர் - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் நல்லபிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, சின்னத்தங்கம், பொன்னு, சின்னத்துரை, இளையதம்பி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ராஜேஸ்வரி (அருந்தி), தவராசகுமாரி (ஆசிரியை - பலாலி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை), மகேந்திரநாதன் (ஜேர்மனி), லலிதா (ஜேர்மனி ), கருணாகரன் (ஆசிரியர் - யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலி), பழநிகரன் (லண்டன்), சுமதி (பட்டதாரி பயிலுநர் - பிரதேச செயலகம், தெல்லிப்பளை), யசோ, தனீஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் குணரத்தினம், சுப்பிரமணியம், தர்மராணி, காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா மற்றும் சஞ்சுளா (ஆசிரியை - யா/சரஸ்வதி வித்தியாலயம், அச்சுவேலி), சரஸ்வதி, கலையரசி (லண்டன்), ரகுகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.12.2021) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2.00 மணிக்கு பலாலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-3151)

பலாலி கிழக்கு,
பலாலி

தகவல் :-
குடும்பத்தினர்

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
1952.10.20

இறப்பு
2019.12.03

அமரர்

## தில்லையம்பலம் துரைராசா

[ ஓய்வுபெற்ற ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் ]

ஈராண்டு காலம் உருண்டு மறைந்தாலும்
உம் உயிர்மூச்சு மறைவதில்லை!
ஓராயிரம் யுகங்கள் ஒடி ஒழிந்தாலும்
உம் நினைவுகள் ஒழிவதில்லை!

" ஸ்ரீ முருகா நிவாசா "
கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை.

(8881)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத் தமிழர்களே இந் நாட்டின் பூர்வீகக் குடிகள்

# தமிழர் தாயக சர்ச்சைக்கு

# பதிலடி கொடுத்தார் விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஒரு சிங்கள நாடல்ல. சிங்களவரைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு நாடே. ஆனால் வடக்குக் கிழக்கில் உள்ள பெரும்பான்மையானோர் தமிழ்ப் பேசுபவர்கள். அதனால் அதனை தமிழர் தாயகம் என அழைப்பதில் தவறில்லை என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அண்மையில் பாராளுமன்றில் 'தமிழர் தாயகம்' என்ற சொற்றொடருக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஹன்சார்டில் இருந்து நீக்குமாறு கோரியிருந்தனர். அதற்கு பதிலளிக்கும் முகமாக நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த இவ்வாரத்திற்கான கேள்வி பதிலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரித்தானியர் நிர்வாக நோக்கங்களுக்காக இந் நாட்டை 1833 ஆம் ஆண்டில் ஒன்றாக்கிய பொழுது யாழ்ப்பாண இராச்சியம் ஒன்று வடக்கில் இருந்தது. மேலும் கிழக்கின் தமிழ் சிற்றரசர்கள் கண்டிய மன்னனுக்குத் திறை கட்டி வந்தனர்.

இறுதிக் கண்டிய மன்னன் தமிழனாக இருந்தது மட்டுமன்றி 1815 இல் பிரித்தானியருடன் செய்த ஒப்பந்தத்தில் தமிழிலேயே கையொப்பம் இட்டிருந்தார். அதேபோல கண்டிய சிங்களத் தலைவர்கள் சிலரும் அவ்வாறே செய்தனர்.

எந்த விதத்திலும் உங்களால் இலங்கையை ஒரு சிங்கள அல்லது பௌத்த சிங்கள நாடாக அழைக்க முடியாது.

இந் நாடு சிங்களம் பேசும் பெரும்பான்மையோர் வசிக்கும் பிரதேசங்களையும் தமிழ்ப் பேசும் பெரும்பான்மையர் வசிக்கும் பிரதேசங்களையும் உள்ளடக்கிய நாடு. 3000 வருடங்களுக்கு முன்னர் இந் நாட்டில் வாழ்ந்த பூர்வீக வாசிகள் தமிழையே பேசினர். அப்பொழுது சிங்களமொழி என்ற ஒருமொழி பிறந்திருக்கவில்லை.

ஆகையால் அப்பொழுது சிங்களவர்கள் இருந்திருக்கவில்லை. சிங்கள மொழியானது தமிழையும் பாளியையும் கொண்ட ஒரு கலப்பு மொழியாகும். தமிழ் மொழி மூலமாக சில சமஸ்ஹிருத சொற்கள் சிங்கள மொழியைச் சென்றடைந்தன. முதலாவது சிங்கள இலக்கண நூலான "சிதத் சங்கரய" கி.பி.13 ஆம் நூற்றாண்டளவில்த்தான் எழுதப்பட்டது. சிங்கள மொழியானது 3000 வருடங்களுக்கு முன்னரே இருந்திருப்பின் அம்மொழி ஒரு இலக்கண நூலைப் பிறப்பிப்பதற்கு ஏன் 1700 வருடங்கள் எடுத்தது?

மகாவம்சம் எழுதப்பட்ட பொழுது சிங்கள மொழியென ஒன்று உதித்திருக்கவில்லை. ஆகையால் தான் மகாவம்சம் பாளிமொழியில் எழுதப்பட்டது. "அத்தகதா"வும் கூட பாளி மொழியிலேயே எழுதப்பட்டது. கி.பி 5 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் சிங்கள மொழி நூல்களோ சிங்களக் கல்வெட்டுச் சான்றுகளோ எவையும் இது வரை கண்டெடுக்கப்படவில்லை. மகாவம்சத்தின் ஆசிரியர் மகாநாம ஒவ்வொரு செய்யுளின் முடிவிலும் அதன் இறுதிப் பாடல் வரிகள் ஒவ்வொன்றிலும் பௌத்தசமயத்தின் பெருமையை வெளிப்படுத்துவதற்காக வேதம் நூலை எழுதியுள்ளதாக கூறியிருக்கின்றார்.

ஆகவே மகாவம்சம் ஒரு சரித்திர வலுக் கொண்ட நூல் அல்ல. கடந்த 73 வருடகாலமாக சிங்கள அரசியல் வாதிகளும் சிங்கள புத்திஜீவிகளும் சிங்கள மொழியைப் பற்றியும் சிங்களவர் சரித்திரத்தைப் பற்றியும் திரிபுபடுத்தப்பட்ட கருத்துக்களைத் தந்திரமாக வெளியிட்டு வந்துள்ளார்கள்.

வடக்குக் கிழக்கில் காலங்காலமாக வழங்கி வரப்பட்ட தமிழ் இடங்களின் பெயர்கள் சிங்கள மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்டன. உதாரணமாக, பல நூற்றாண்டு காலமாக மணலாறு எனத்தமிழில் இருந்த பெயரானது வெலிஓயா என சுதந்திரத்தின் பின்னர் மாற்றப்பட்டது.

பௌத்தத்தை சிங்கள மொழியுடன் இணைத்து எங்கெங்கெல்லாம் பௌத்த சின்னங்கள் இருக்கின்றனவோ அவை அனைத்தும் சிங்கள மக்கள் பூர்வீகமாகக் குடியிருந்த இடங்கள் என ஏமாற்றி வருகின்றனர்.

இது முற்று முழுதான ஒரு தவறு. பேராசிரியர் சுனில் ஆரியரட்ண என்பவர் சில வருடங்களுக்கு முன் சிங்கள மொழியில் "தெமள பௌத்தயோ" (தமிழ் பௌத்தர்கள்) என ஒரு நூலை எழுதியுள்ளார். எங்களுடைய நாட்டின் சரித்திரத்தில் தமிழர்கள் ஒரு காலப்பகுதியில் பௌத்தர்களாக இருந்தார்கள் என்பதை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

அக் காலப்பகுதியில் சிங்கள மொழி இருந்திருக்கவில்லை.



ஆகவே தமிழ் பௌத்தர்கள் பெருவாரியாக வாழ்ந்த காலப் பகுதியில் சிங்களவர்கள் எவரும் வடகிழக்கில் இருந்திருக்கவில்லை.

எனினும் சிங்கள இனவாத சரித்திர ஆசிரியர்களும் திட்டமிடும் பௌத்த துறவிகளும் கி.பி. 5ஆம் 6 ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்து பின்னர் சிங்களமொழிக்கு வந்த பாளிச் சொற்களைக் குறிப்பிட்டு அவற்றை சிங்கள மொழி எனக் கூற முற்பட்டனர். அவை சிங்கள மொழிச் சொற்கள் அல்ல. அவை பாளிமொழிச் சொற்கள்.

ஆனால் இலங்கையை ஒரு தமிழ் இந்து நாடு என குறிப்பிடுவதற்குரிய சாத்தியக் கூறுகள் பல உண்டு. சைவத் தமிழர்கள் தான் இந்தத் தீவின் பூர்வீகக் குடிகள். வடக்கில் கீரிமலையில் உள்ள நகுலேஸ்வரத்தில் உள்ள சிவலிங்கமும் வடமேற்கில் மன்னாரில் உள்ள திருக்கேதீஸ்வரமும் மேற்கில் சிலாபத்தில் உள்ள முன்னேஸ்வரமும் கிழக்கில் திருகோணமலையில் உள்ள கோணேஸ்வரமும் தெற்கில் தெய்வேந்திர முனையில் உள்ள தொண்டீஸ்வரமும் சரித்திரத்திற்கு முந்திய காலம் முதல் இந் நாட்டைப் பாதுகாத்து வந்தன என்பது ஐதீகம். வரலாற்று ரீதியாக அவை சரித்திர காலத்திற்கு முன்பிருந்தவை என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஆரியன் என்ற சொல்லானது ஒரு இனத்தைக் குறிப்பிடவில்லை. ஆகையால் சிங்களவர்கள் தங்களை ஆரிய இனத்தினர் எனக் குறிப்பிட முடியாது. அவர்கள் 1500 வருடங்களுக்கு முன்னர் ஒரு புதிய மொழியை ஏற்றுக் கொண்ட உள்ளூர் தமிழர்கள் ஆவர். சிங்களவர்களும் தமிழர்களும் ஒரு பொது உற்பத்தியில் இருந்து வந்தவர்கள் என்பது சமீபத்தில் நடத்திய உயிரணு ஆராய்ச்சியில் இருந்து நிரூபிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகள் தமிழரின் தாயகமாக 3000 வருடங்களுக்கு மேல் இருந்து வந்துள்ளது. இதனை 1987ஆம் ஆண்டின் இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்றுள்ளது. ஆகவே "தமிழர் தாயகம்" என்று பெரும்பான்மை தமிழர் வசிக்கும் இலங்கையின் வடக்குக் கிழக்கை அழைப்பதில் எந்தப் பிழையும் இல்லை என அவர் தெரிவித்தார். (நி)

# ஊழியர் சங்கத்தினரால்

## யாழ்.பல்கலை. முன்றலில் கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றலில் அடையாள மௌன தொழிற்சங்கப் போராட்டமொன்று இடம்பெற்றது.



அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டுக் குழுவின் தீர்மானத்துக்கமைய நீண்டகாலமாக நிலவி வரும் பல்கலைக்கழக கல்விசாரா பணியாளர்களின் சம்பள முரண்பாடு மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் அடையாள மௌன தொழிற்சங்கப் போராட்டம் இலங்கையின் சகல பல்கலைக்கழகங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றது.

இதனொரு கட்டமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றலிலும் நேற்று நண்பகல் 12 மணியளவில் இந்த போராட்டம் இடம்பெற்றது.

கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வினை வழங்கு, சம்பள முரண்பாட்டைத் தீர்க்கும் குழுவின் அறிக்கையை உடனடியாக நடைமுறைப்படுத்து போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளை தாங்கியிருந்தனர். (4-18-33-104-299)

# 9 வருடங்களின் பின்னர்

## மலேரியா நோயாளி அடையாளம்

(காலி)

காலி, நெலுவ பிரதேசத்தில் மலேரியா நோயாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உகண்டாவில் பணியாற்றிய அவர் மூன்று மாதங்களுக்கு முன்னர் இலங்கை திரும்பியதாக தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சந்திம சிரிதுங்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, கடந்த 27 ஆம் திகதி அவசர சுகயீனம் காரணமாக அவர், உடுகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அதன்போது, மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவர் மலேரியாவினால் பீடிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்தது.

இலங்கையில் கடந்த 2012 ஆம் ஆண்டில் இறுதியாக மலேரியா நோயாளியொருவர் அடையாளம் காணப்பட்டிருந்தார்.

அதன்பின்னர், மூன்று வருட காலப்பகுதியில் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்ட எவரும் அடையாளம் காணப்படாததால், இலங்கை மலேரியா நோயற்ற நாடாக 2016 ஆம் ஆண்டு உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அறிவிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா-நியூஸிலாந்து 2ஆவது டெஸ்ட் இன்று



நியூசிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகின்றது.

இரு அணிகள் இடையேயான 20 ஓவர் தொடரை இந்தியா 3-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

2 டெஸ்ட் தொடரில் கான்பூரில் நடந்த முதல் டெஸ்ட் டிரா ஆனது. இந்தியா- நியூசிலாந்து அணிகள் மோதும் 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

முதல் டெஸ்டில் இந்திய அணி வெற்றி வாய்ப்பை இழந்தது. நியூசிலாந்தின் கடைசி விக்கெட் ஜோடியின் சிறப்பான ஆட்டத்தால் வெற்றி பறிபோனது. இதை சரிசெய்யும் வகையில் 2 ஆவது டெஸ்டில் வெற்றி பெற்று இந்தியா தொடரை கைப்பற்றும் ஆர்வத்தில் உள்ளது.

20 ஓவர் தொடர் மற்றும் முதல் டெஸ்டுக்கு ஓய்வு கொடுக்கப்பட்ட கப்டன் விராட் கோலி இன்றைய டெஸ்டில் ஆடவுள்ளார். அவரது வருகை அணிக்கு பட்டிங்கில் மேலும் பலம் சேர்க்கும்.

விராட் கோலிக்காக அணியிலிருந்து யார் நீக்கப்படுவார் என்று ஆவலுடன் எதிர் நோக்கப்படுகிறது. ஸ்ரேயாஸ் அய்யர் கடந்த டெஸ்டில் அறிமுகம் ஆனார். முதல் இன்னிங்சில் சதமும், 2ஆவது இன்னிங்சில் அரை சதமும் அடித்து அவர் முத்திரை பதித்தார். இதனால் ஸ்ரேயாஸ்அய்யர் நீக்கப்பட வாய்ப்பு இல்லை.

கடந்த டெஸ்டில் கப்டனாக பணியாற்றிய ரகானே நீக்கப்பட வாய்ப்பு உள்ளது. கடந்த 16 டெஸ்டில் அவரது சராசரி 24.39 ஆகும். இதேபோல தொடக்க வீரர் மயங்க் அகர்வால், புஜாரா ஆகியோரது பட்டிங்கும் ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது. இந்த 3 பேரில் ஒருவர் நீக்கப்படலாம்.

முதல் டெஸ்டில் காயத்துடன் ஆடிய விர்த்திமான் சஹா முழு உடல் தகுதியுடன் இருக்கிறாரா? என்பது உறுதியாக தெரியவில்லை. அவர் ஆட முடியாமல் போனால் புதுமுக விக்கெட் கீப்பர் பரத்துக்கு வாய்ப்பு கொடுக்கப்படும்.

சுழற்பந்தில் அஸ்வின், அக்ஷர் படேல், ஜடேஜா ஆகியோர் மிகவும் நல்ல நிலையில் உள்ளனர். மூவரும் சேர்ந்து முதல் டெஸ்டில் 17 விக்கெட் சாய்த்தார்கள்.

நியூசிலாந்து அணியில் தொடக்க வீரர்கள் டாம் லாதம், வில் யங் ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர். இது தவிர கப்டன் வில் லியம்சன், ரோஸ் டெய்லர் போன்ற சிறந்த பட்ஸ்மேன்களும் இருக்கிறார்கள். பந்து வீச்சில் சவுத்தி, ஜேமிசன் முத்திரை பதிக்க கூடியவர்கள். அஜாஸ் படேல் சுழற்பந்தில் சிறப்பாக செயற்படக் கூடியவர்.

இரு அணிகளும் இதுவரை 61 டெஸ்டில் மோதியுள்ளன. இதில் இந்தியா 21ஆல், நியூசிலாந்து 13ஆல் வெற்றி பெற்றுள்ளன. 27 டெஸ்ட் சம நிலை ஆனது. இன்றைய டெஸ்ட்போட்டிகாலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும். (4-6)

# ஆஷஸ் தொடர்:
# ஆஸி. அணி அறிவிப்பு



கிரிக்கெட் உலகின் போர் என வர்ணிக்கப்படும், ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதல் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணி விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அணித் தலைவர் பதவியில் இருந்து விலகிய டிம் பெய்னுக்கு பதிலாக அலெக்ஸ் கேரி டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகம் பெறுகிறார். இவர் டேவிட் வோர்னருடன் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறங்கவுள்ளார்.

பெட் கம்மின்ஸ் டெஸ்ட் அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஸ்டீவ் ஸ்மித் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.


பெட் கம்மின்ஸ் தலைமையிலான அணியில், அலெக்ஸ் கேரி, கெமரூன் கீரின், மார்கஸ் ஹரிஸ், ஜோஸ் ஹசில்வுட், ட்ராவிஸ் ஹெட், உஸ்மான் கவாஜா, மார்னஸ் லபுஸ்சேகன், நாதன் லியோன், மைக்கேல் நீஸர், ஜெய் ரீச்சட்சன், ஸ்டீவ் ஸ்மித், மிட்செல் ஸ்டாக், மிட்செல் ஸ்வெப்சன், டேவிட் வோர்னர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இரு அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி, எதிர்வரும் 8ஆம் திகதி பிரிஸ்பேனில் நடைபெறவுள்ளது. (4-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2461

Search for people, places and things

**சாந்தன்**



எங்கேயோ பெரிய சண்டை நடக்க போகுது... ஆயுதங்கள் எல்லாம் தயார் பண்றாங்க

**ராகுல்**



மச்சான் என் Birthday க்கு Cake வெட்டி celebrate பண்ணுவீங்களா



நீ எல்லாம் பிறந்ததே ஒரு கேடு உனக்கு கேக் ஒரு கேடு

**ஐரின்**

காய்கறியை சமைச்சு சாப்பிடறது நல்லதா? பச்சையா சாப்பிடறது நல்லதா? பச்சையா சாப்பிறது தான் நல்லது எத வைச்சு சொல்ற?



காஸ் விலையை வைச்சு தான்...

**ஆனந்தன்**




இந்த குளிர்லயும் நாங்க பச்சதண்ணில தா குளிக்கிறோம்




பெய்யிற மழையிலேயே நாங்க தினத்துல குளிப்போம் போலியா அங்கிட்டு

**குமார்**

என்னங்க Gas Cylinder எல்லாம் வெடிக்குதாம், வரும் போது நீங்க கடையிலேயே சாப்பாடு கொண்டு வாங்க



அப்பாடா... இதை வச்சே கொஞ்ச நாளைக்கு சமைக்காம ஓட்ட வேண்டியது தான்

**ஐறின்**




என்னடா? வருஷம் பொறக்க போகுதே.. ஒண்ணயும் காணுமே என்று நெனச்சிட்டு இருந்தேன். வந்துட்டான் ஒமிக்ரோன் கொரோனா இனி வருஷம் பூரா அவன்கூட போராடனும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

03.12.2021
கார்த்திகை 17, வெள்ளிக்கிழமை
சதுர்த்தசி பிற்பகல் 4.22 மணிவரை
விசாகம் பிற்பகல் 1.27 மணிவரை
சுபநேரம் 6.15-7.45 மணிவரை
இராகுகாலம் 10.45-12.15 மணிவரை
சந்திராஷ்டமம்: அச்சுவினி, பரணி
போதாயன அமாவாசை

வளவன்


மேஷம்

மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


ரிஷபம்

மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கௌரவமான நாள்.


மிதுனம்

ஆரோக்கியம் சம்பத்தப்பட்ட வகையில் இருந்த குழப்பம் தீரும், தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.


கடகம்

பெற்றோர் மீதான பாசம் கூடும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு உண்டு, அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.


சிம்மம்

சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களை காணும் நாள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.


கன்னி

நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


துலாம்

உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.


விருச்சிகம்

விரும்பிய காரியங்கள் விரும்பியபடி நடைபெறும், வழிபாடு குதூகலம் தரும், குடும்பத்தினர் உங்கள் குணம் அறிந்து நடந்து கொள்வர், கற்பனை மிகுதியான நாள்.


தனுசு

சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.


மகரம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.


கும்பம்

நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், தொழில் நலன் கருதி தீட்டிய திட்டங்கள் முன்னேற்றம் தரும், உயர்வான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும்.


மீனம்

தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், சுணங்கிய காரியங்களில் முன்னே ற்றம் காண்பீர்கள், அன்பால் சாதித்து காட்டும் நாள், பயணங்களால் பலனுண்டு.

வெளிக்காட்டாத அன்பு முழுமையான அன்பு அன்று

# அரசை வீட்டிற்கு அனுப்ப
# அனைவரும் ஓரணியில் திரள்வோம்

## எதிர்க்கட்சித் தலைவர் அறைகூவல்

(கொழும்பு)

**"நாட்டு மக்கள் அனைவரையும் பிச்சைக்காரர்களாக மாற்றுவதற்கு முயலும் இந்த அரசை வீட்டுக்கு விரட்டியடிக்க சகலரும் ஓரணியில் திரள வேண்டும்." என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்துள்ளார்.**



இது தொடர்பில் ஊடகங்க ளிடம் அவர் மேலும் தெரி வித்ததாவது:-
"கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்த நாள் தொடக்கம் நாட்டு மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொண்டு வருகினறனர். இந்நிலையில், கொரோனாவைக் காரணம் காட்டி இந்த அரசு தப்பிப்பிழைக்க முயல்கிறது.

எரிவாயு சிலிண்டர் வெடிப்பு பிரச்சினைக்கும் கொரோனாத் தொற்றுக்கும் என்ன தொடர்பு உண்டு?

மக்களை மடையர்களாக்கி ஆட்சியை முன்நகர்த்தலாம் என்று ராஜபக்ஷக்கள் கனவு காண்கின்றனர். இதற்கு மக்கள் ஒரு போதும் இடமளிக்கக்கூடாது.

ஒட்டுமொத்த நாட்டு மக்களை யும் ஏமாற்றிப் பிழைக்கும் இந்த அரசுக்குத் தகுந்த பதிலடி கொடு க்க வேண்டும். இந்த அரசை வீட்டுக்கு விரட்டியடிக்க சகலரும் ஓரணியில் திரள வேண்டும்.

இல்லையேல் இந்த ஆட்சியில் மக்கள் அனைவரும் பிச்சைக் காரர்களாக மாறும் நிலைமை ஏற்படும் வறுமையின் பிடியில் சிக்கி பரிதவிக்கும் நிலைமை உண்டாகும்" என அவர் தெரிவித்தார். (நி)


## வட மாகாண அரச சேவை உத்தியோகத்தர்களுக்கான அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் பகுதி IV பிரகாரம் அமைக்கப்பட்ட மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவிற்கு மாகாணத்தின் கௌரவ ஆளுநரால் கையளிக்கப்பட்ட நியமனம், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் பதவி நீக்கம் ஆகிய நடவடிக்கைகள் தொடர்பான அதிகாரங்கள், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் பிரதம செயலாளர், அமைச்சு செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு அதிகாரக் கையளிப்பு செய்யப்பட்டுள்ளது.

அதிகாரம் கையளிப்பு செய்யப்பட்டுள்ள அதிகாரியினால் தமக்கு கையளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் நியமனம் அதாவது தகுதிகாண் காலம் முடிவடையும் போது சேவையில் உறுதிப்படுத்தல், வருடாந்தம் சம்பள ஏற்றத்தை உழைத்துப் பெறுதல், வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில், திணைக்களப் பரீட்சையில் சித்தியடைதல் போன்ற சேவை நிபந்தனைகளை பூர்த்தி செய்தவர்களுக்கு வருடாந்த வேதன ஏற்றம் வழங்கப்படாமை, சேவையில் உறுதிப்படுத்தப்படாமை மற்றும் பதவி உயர்வு வழங்கப்படாமை போன்றவையும் கௌரவ ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்ட மாகாண இடமாற்றக் கொள்கைக்கு ஏற்ப இடமாற்றம் பெற்றவர்கள், அதனால் தாம் பாதிக்கப்பட்டவர்களாக கருதுபவர்கள், மாகாண உத்தியோகத்தர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகளின் போது முறைசார் ஒழுக்காற்று விசாரணையில் தண்டனை விதிக்கப்படுவதற்கு முன்பு செய்யப்பட்ட தண்டனை இடமாற்றம், வருடாந்த வேதன ஏற்றம் வழங்காமை போன்ற செயல்களினால் பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் அவ்வாறான பாதிப்புக்கு எதிராக மாகாண பொது சேவை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு ஒன்றை செய்ய முடியும்.

அவ்வாறு மேன்முறையீடு செய்பவர்கள் தாங்கள் கடமையாற்றும் திணைக்களத் தலைவர் ஊடாக பாதிப்பிற்கான உத்தரவு கிடைத்து ஆறு (6) மாதங்களுக்குள் அத்தகைய கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்யலாம்.

தற்போது சேவையில் இல்லாத ஒருவர் தனது மேன்முறையீட்டை தான் இறுதியாக கடமையாற்றிய திணைக்களத்திற்கு பிரதியுடன் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு நேரடியாக சமர்ப்பிக்க முடியும்.

மேன்முறையீடுகளின் பிரதிகளை வடமாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் மாவட்ட ரீதியாக உள்ள உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகங்களில் இதற்கென அமைக்கப்பட்டுள்ள கருமபீடங்களில் முறைப்பாட்டாளர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இந்நடைமுறை பரீட்சார்த்தமாக டிசெம்பர் மாத இறுதி வரையில் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்வதுடன். அமர்வு நடைபெறும் தினங்கள் தொடர்பான விபரங்கள் www.np.gov.lk என்ற இணையத்தளத்தில் வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் பக்கத்தில் வெளியிடப்படும் என்பதையும் இத்தால் அறியத் தருகின்றேன்.

வடமாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி

சி.திருவாகரன்,
செயலாளர்,
மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு,
வடமாகாணம்.

(C-3146)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசெம்பர் 6- 12 வரை

# டெங்கு கட்டுப்பாட்டு வாரம்

## யாழ். அரச அதிபர் மகேசன்

**(யாழ்ப்பாணம்)**

**யாழ். மாவட்டத்தில் டெங்கு அபாயம் அதிகரித்துள்ள நிலையில் எதிர்வரும் 6 தொடக்கம் 12 வரை டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் க. மகேசன் தெரிவித்தார்.**



நேற்று முன்தினம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மழையுடனான காலநிலையின் பிற்பாடு டெங்கு பரவும் அபாயம் அதிகரித்துக் காணப்படுகின்றது. கடந்த வருடத்தை விட இந்த வருடத்தில் கடந்த வாரம் வரை டெங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த நிலை காணப்படுகின்றது.

கடந்த வாரம் வரை 133 நபர்களுக்கு டெங்கு நோய் ஏற்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

டெங்கு அதிகமாக செப்டெம்பர், ஒக்டோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களில் அதிகரித்துக் காணப்படுகின்றன.

அதன் பிரகாரம் எதிர்வரும் 6ஆம் திகதி தொடக்கம் ஒரு வாரத்தினை நுளம்பு கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனப்படுத்தி அந்த வாரம் யாழ்ப்பாண குடாநாடு பூராகவும் அனைத்து பங்குதாரர்களுடனும் நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கையினை மேற்கொள்ள இருக்கிறோம்.

அதனடிப்படையில்ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியிலும் டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு செயலணி கூட்டத்தை நடத்தி ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு ரீதியாகவும் தங்களுடைய பிரதேசத்தில் டெங்குக் கட்டுப்பாட்டிற்கென மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும் என கோரி இருக்கின்றோம் என மேலும் தெரிவித்தார்.(4-33)





டேவிட் பீரிஸ் மோட்டார்க் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனம் 405, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கில் **DPMS Workshop,** பஜாஜ் அசல் உதிரிப்பாக காட்சியறை என்பவற்றை நிறுவவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா மற்றும் டேவிட் பீரிஸ் குழுமத்தின் தலைவர் டேவிட் பீரிஸ், முகாமைத்துவப் பணிப்பாளருமான ரோஹன திஸாநாயக்க உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி வைத்தனர். (படங்கள்:- ரவிசாந்)

# சீரற்ற காலநிலையால் யாழில் 121 குடும்பங்கள் பாதிப்பு

## 7 வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது 121 குடும்பங்களைச் சேர்ந்த 380 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் என். சூரியராஜ் தெரிவித்தார்.

அத்தோடு சீரற்ற காலநிலையால் 7 வீடுகள் பகுதியளவில் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த நிலையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள கொடிகாமம் வடக்கு ஜே/326 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட, சந்தை வீதியினை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் உள்ளிட்டவர்கள் நேரடியாக சென்று பார்வையிட்டனர்.

குறித்த பகுதியில் 35 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். வீதியில் தேங்கியுள்ள வெள்ளநீரினை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். (4-33)

## கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள **Zoom** செயலி ஊடான மருத்துவக் கருத்தமர்வில் "யாவர்க்கும் நலம்" எனும் நிகழ்ச்சித் தொடரானது பிரதி சனிக்கிழமை தோறும் மாலை 7 மணி தொடக்கம் 9 மணி வரை இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில் இந்த வாரம் டிசெம்பர் 1 உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு நாளை 4 ஆம் திகதி சனிக்கிழமை "பால்வினை நோய்களும் அதற்கான தீர்வுகளும்" எனும் தலைப்பில் கருத்தமர்வு இடம்பெறவுள்ளது.

இக்கருத்தமர்வில் கலந்து கொள்வதற்கான Meeting ID 89985282023, Passcode 354485 ஆகும். (4)

# வீட்டுக்குள் புகுந்த நாகபாம்பினை கையால் பிடித்த பெண்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோண்டாவில் பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் 6 அடி நீளமுள்ள நாகபாம்பு புகுந்துள்ளது.

இதனை அவதானித்த அந்த வீட்டுப்பெண் அந்தப் பாம்பினை சாதாரணமாக கையால் பிடித்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

எனினும் பாம்பு யாரையும் தீண்டவில்லை. பிடித்த பாம்பு செம்மணி வெளியில் உயிருடன் விடப்பட்டது. (4-104)



# மோட்டார் சைக்கிள் விபத்து; இரு பெண்கள் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-நுணாவில் பகுதியில் ஏ9 வீதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்ற வீதி விபத்தில் இரு பெண்கள் படுகாயமடைந்தனர்.

வீதியால் நடந்து சென்ற வயோதிபப் பெண்ணை ஏ9 வீதி ஊடாக பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ் விபத்து சம்பவித்துள்ளது.

இதில் வீதியால் நடந்து சென்ற நுணாவில் மத்தி பகுதியைச் சேர்ந்த 69 வயதான பெண் மற்றும் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற நல்லூரைச் சேர்ந்த 27 வயதான பெண் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-30)



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பயிலும் வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த 50 மாணவர்களுக்கு எம். எம் பவுண்டேசன் நிதியத்தினால் ஏ.கே.ஓ. புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் மாதாந்தம் ஐயாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கடந்த திங்கட்கிழமை கைச்சாத்திடப்பட்டது. (படம்: சிவசாந்தன்)

# சாவகச்சேரி நகரசபையின் பாதீடு நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரசபையின் 2022ஆம் ஆண்டிற்கான வரவு- செலவுத் திட்டம் நேற்று வியாழக்கிழமை சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தலைமையில் வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பு இடம்பெற்றது.18 உறுப்பினர்களைக் கொண்ட சாவகச்சேரி நகர சபையில் 14 உறுப்பினர்கள் கலந்து கொண்ட நிலையில் அனை வருமே தமது ஆதரவினைத் தெரிவித்தனர். (4-18-30-33-104)

# மதுபோதையில் வாகனத்தில் பயணித்த 8 பேர் கைது

(கரணவாய்)

மதுபோதையில் வாகனத்தில் பயணித்த 8 பேரை நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 3 மணியளவில் நடைபெற்றது.

வடமராட்சி நெல்லியடி பகுதியில் ஹயஸ் வாகனத்தில் பயணித்தவர்களை நெல்லியடி சந்தியில் கடமையில் ஈடுபட்ட பொலிஸார் சோதனை செய்தனர்.

அதில் பயணித்த 8 பேரும் மதுபோதையில் காணப்பட்டதால் பொலிஸார் அனைவரையும் கைது செய்தனர்.

8 பேரும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனவும், மரணச் சடங்கொன்றில் கலந்து கொண்டு விட்டு வீடு திரும்பும் போதே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் டெங்கு நோயாளர்கள்

(கொழும்பு)

**நாட்டில் தொற்றுக்கு மத்தியில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையிலும் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார தரப்பினர் தெரிவித்தனர்.**

தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமூக மருத்துவ நிபுணர் ஷிலந்தி செனவிரத்ன இந்த விடயத்தினைக் குறிப்பிட்டார்.

நாட்டில் கடந்த இரு மாதங்களாக நிலவிவரும் மழையுடனான வானிலை காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், கடந்த நவம்பர் மாதத்தில் மாத்திரம் 4 ஆயிரத்து 561 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் நேற்று முன்தினம் புதன்கிழமை மாத்திரம் 117 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

காய்ச்சல், தசைவலி போன்ற சில அறிகுறிகள் கொவிட் மற்றும் டெங்கு ஆகிய இரண்டிலும் காணப்படலாம் என்பதில் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி)

# பல்கலை. மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கோப்குழு அழைப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவுக்கு கோப் எனப்படும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய பாராளுமன்ற தெரிவுக் குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் 6 ஆம் திகதி மீண்டும் முன்னிலையாகுமாறு அந்த ஆணைக்குழுவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# எரிவாயு கொள்கலன் விற்பனையில் வீழ்ச்சி

(ஹற்றன்)

லிட்ரோ எரிவாயு கொள்கலன்களின் விற்பனையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக ஹற்றனில் உள்ள எரிவாயு விற்பனையாளர்கள் தெரிவித்தனர்.

நாட்டில் தொடர்ச்சியாக எரிவாயு கசிவு, எரிவாயு அடுப்புகள் மற்றும் உபகரணங்கள் வெடிப்பு போன்ற சம்பவங்கள் பதிவாகி வருவதையடுத்து இவ்வாறு விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தாம் கருதுவதாக குறித்த விற்பனையாளர்கள் தெரிவித்தனர். (நி)


# விடுதலையானார் அசாத் சாலி



(கொழும்பு)

மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலிக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப் பட்ட இரண்டு குற்றச்சாட்டுக்களில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். கொழும்பு மேல் நீதிமன்றம் குறித்த உத்தரவினை நேற்றுக் காலை பிறப்பித்துள்ளது. (நி)

# சீன உரக்கப்பல் தொடர்ந்தும் இலங்கையில்



(கொழும்பு)

பாதக மான நுண் ணுயிர்கள் அடங்கிய சீனாவின் உரத்தை ஏற்றிய ஹிப்போ ஸ்பிரிட் கப்பல் இன்னமும் இலங்கை கடற்பரப்பில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. சர்வதேச கப்பல் பயணத் தரவுகளுக்கு அமைய இந்தக்கப்பல் பேருவளையிலிருந்து சுமார் 12.4 கடல் மைல் தொலைவில் நங்கூரமிடப்பட்டுள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்:அத்தம்
கி.பா:26 செவ் 2 சூரி 8 இல்
உயரம்:165cm
தகைமை/தொழில்: HND Civil Engineering, தொழில்நுட்ப உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்
தொ.இ: B/12026

பிறப்பு:1986 இந்து நட்சத்திரம்:உத்தராடம்
கி.பா: - செவ் 7 சூரி 4 இல்
உயரம்: 180 cm
தகைமை/தொழில்:Assistant Engineer Londan
எதிர்பார்ப்பு:படித்த அழகிய பெண்
தொ.இ: B/12027

பிறப்பு:1989 இந்து நட்சத்திரம்: விசாகம்
கி.பா:15 செவ் 9 சூரி 7 இல்
உயரம்:172cm
தகைமை/தொழில்: MSC,BA ஆசிரியர் (GOV)
எதிர்பார்ப்பு:வேலை பார்க்கும் பெண்
தொ.இ: B/12029

பிறப்பு:1994 இந்து நட்சத்திரம்:சதயம்
கி.பா: - செவ் 11சூரி1இல்
உயரம்: 6
தகைமை/தொழில்:Capital Media (தனியார்)
எதிர்பார்ப்பு:கனடா தவிர்ந்த வெளிநாடு மட்டும்
தொ.இ: B/12032

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1988 கிறிஸ்தவம்
உயரம்:5'6"
தகைமை/தொழில்:. நுண்கலைமாணி- யாழ்.பல்கலைக்கழகம் (BFD) ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச அல்லது தனியார் உத்தியோகம், மாறும் இந்து சமயத்தவரும் ஏற்கப்படும் உள்நாடு மட்டும்
தொ.இ:G/12154

பிறப்பு:1997 இந்து நட்சத்திரம்:சித்திரை
கி.பா:செவ் 11சூரி9இல்
உயரம்:5'3"
தகைமை/தொழில்:A/L அபிநயம் FM அறிவிப்பாளர்
தொ.இ:G/12158

பிறப்பு:1998 இந்து நட்சத்திரம்:பரணி 3
கி.பா:19 செவ்11 சூரி11 இல்
உயரம்:158 cm
தகைமை/தொழில்:H.N.D.A
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ:G/12160

பிறப்பு: 1975இந்து நட்சத்திரம்:விசாகம் 2
கி.பா: செவ்11 சூரி2இல்
உயரம்:4'2"
தகைமை/தொழில்: கலைப்பட்டதாரி மியூசிக், அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த மாப்பிள்ளை
தொ.இ:G/12167

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



# சேவை நயப்பும் மணிவிழா வாழ்த்தும்

03.12.2021

திருமதி.
**பத்மினிதேவி அமிர்தலிங்கம்**
(ஆசிரியர், யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் யா/ மிருசுவில் அ.த.க.பாடசாலை)



**சேவை விபரம்**

யா/ மிருசுவில் அ.த.க. பாடசாலை
17.08.1988- 19.01.1992
யா/ பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை, திருநெல்வேலி
20.01.1992-31.12.1993
யா/ மிருசுவில் அ.த.க. பாடசாலை
01.01.1994-09.01.2005
யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
10.01.2005-01.06.2015
யா/ மந்துவில் றோ.க.த.க. பாடசாலை
02.06.2015- 01.01.2017
யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
02.01.2017-03.12.2021

அகவை அறுபதில் ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெறும் எமது சக ஆசிரியரை வாழ்த்துவதோடு அவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Congrats!

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும் போராட்டங்களால் பொருளாதாரத்தை மேம்படுத்துவோம்

## வடகொரிய ஜனாதிபதி அழைப்பு

(பியாங்யாங்)

**பாதுகாப்பு, விவசாயம் மற்றும் கட்டுமானம் உள்ளிட்ட துறைகளில் தொடர்ந்து முன்னேற அடுத்த ஆண்டு மிகப் பெரிய போராட்டத்திற்கு தயாராக இருக்க வேண்டும் என்று வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் தெரிவித்தார்.**



ஆளும் தொழிலாளர் கட்சியின் மத்திய குழுக் கூட்டத் தில் நேற்று முன்தினம் புதன்கிழமை பேசும்போதே கிம் ஜாங் உன் இவ்வாறு குறிப்பிட்டார்.

பாதுகாப்பு, விவசாயம் மற்றும் கட்டுமானம் உள்ளிட்ட துறைகளில் தொடர்ந்து முன்னேற அடுத்த ஆண்டு மிகப் பெரிய போராட்டத்திற்கு தயாராக இருக்க வேண்டும் என்றும் அவர் கருத்து வெளியிட்டார்.

பொருளாதார ரீதியான முன்னேற்றம் குறித்து கிம் ஜாங் உன் தனது திட்டங்களை வெளியிட்டுள்ள போதும் உணவு மற்றும் மின்சார பற்றாக்குறையால் வட கொரியா திண்டாடி வருகிறது.

கொவிட் தொற்று நோய் மற்றும் இயற்கை பேரழிவுகள் ஆகியவற்றாலும் வட கொரியா பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அணுசக்தி மற்றும் ஏவுகணைத் திட்டங்களால் வடகொரியா மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளால் அந்நாடு அவதியுற்று வருவதாக ஐ.நா. முகவரமைப்புக்கள் தெரிவித்தன.

வட கொரியாவில் இதுவரை கொரோனாத் தொற்று நோயாளி ஒருவர்கூட அடையாளப்படுத்தப்பட்டதாக அந்நாடு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

ஆனால் கொரோனாப் பரவலைத் தடுக்க எல்லைகளை மூடி, உள்நாட்டு பயணக் கட்டுப்பாடுகள் உள்ளிட்ட கடும் கட்டுப்பாடுகளை அந்நாடு விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஹோண்டுராஸில் முதல் பெண் ஜனாதிபதியாக சியோமாரா காஸ்ட்ரோ தேர்வு

(ஹோண்டுராஸ்)

லத்தீன் அமெரிக்க நாடான ஹோண்டுராஸில், முதல் பெண் ஜனாதிபதியாக சியோமாரா காஸ்ட்ரோ தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை வெளியான ஜனாதிபதி தேர்தலின் முடிவுகளின் படி, சியோமாரா காஸ்ட்ரோ 53 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

அவரை எதிர்த்து போட்டியிட்ட தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான டெகுசிகல்பா மேயர் நஸ்ரி அஸ்ஃபுரா, 34 சதவீத வாக்குகளைப் பெற்றார்.

அத்துடன், வெற்றிபெற்ற சியோமாரா காஸ்ட்ரோவுக்கு நஸ்ரி அஸ்ஃபுரா, வாழ்த்துத் தெரிவித்தார்.

இதன்மூலம் 12 ஆண்டு



களுக்கு பின்னர் ஹோண்டுராஸில் இடதுசாரி கட்சி ஆட்சியை பிடித்துள்ளது. மேலும் இந்த வெற்றியின் மூலம் ஹோண்டுராஸின் முதல் பெண் ஜனாதிபதி என்ற பெருமையையும் சியோமாரா காஸ்ட்ரோ பெற்றுள்ளார்.

62 வயதான சியோமாரா காஸ்ட்ரோ, முன்னாள் ஜனாதிபதி மானுவல் ஜெலயாவின் மனைவி என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## சீனாவில் இருந்து செயற்பட்டு வந்த 500 பேஸ்புக் கணக்குகள் முடக்கம்

(பீஜிங்)

பேஸ்புக் **Meta Platforms**, சீனாவில் இருந்து செயற்படுவதாக அடையாளம் காணப்பட்ட சுமார் 500 போலிக்கணக்குகளை முடக்கியுள்ளது.

அந்தப் போலிக் கணக்குகளைப் பயன்படுத்தி கொவிட்டின் ஆரம்பம் குறித்த பரிசோதனைகள் தொடர்பாக போலியான செய்திகள் பரப்பப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்தக் கணக்குகள் சுவிஸ் உயிரியலாளர் வில்சன் எட்வர்ட்ஸ் என்ற போலியான பெயரில் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

போலிக் கணக்குகளின் உள்ளடக்கங்கள் சீன ஊடகங்கள் மூலம் பரப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி)

## உக்ரெய்னை ஆக்கிரமிக்க ரஷ்யா திட்டம்

### அமெரிக்கா பரபரப்புத் தகவல்

(வோஷிங்டன்)

உக்ரெய்னை ஆக்கிரமிக்க ரஷ்யா திட்டமிட்டு வருவது தொடர்பாக தங்களிடம் ஆதாரம் உள்ளது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து லாட்வியா தலைநகர் ரிகாவில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற நேட்டோ உறுப்பு நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் உரையாற்றிய அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

'உக்ரெய்னின் நிலைத்தன்மையை சீர்குலைக்க ரஷ்யா திட்டமிட்டுள்ளது.

மேலும் உக்ரெய்னுக்கு எதிராக மிகப் பெரிய இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளவும் ரஷ்யா ஆயத்தமாகி வருவதற்கான ஆதாரம் எங்களிடம் உள்ளது.

ரஷ்யா அத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்டால், அந்த நாட்டின் மீது இதுவரை இல்லாத அளவுக்கு மிகக் கடுமையான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும்' எனத் தெரிவித்தார். (நி)

## அமெ.உயர்நிலைப் பாடசாலையில் துப்பாக்கிச்சூடு; மூவர் பலி, ஆசிரியர் உட்பட எட்டுப் பேர் காயம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் மிச்சிகன் மாநிலத்தில் உள்ள உயர்நிலைப் பாடசாலையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 3 மாணவர்கள் கொல்லப்பட்டதுடன் ஒரு ஆசிரியர் உட்பட 8 பேர் காயமடைந்துள்ளனர்.

ஒக்ஸ்போர்டு டவுன்ஷிப்பில் உள்ள ஒக்ஸ்போர்டு உயர்நிலை பாடசாலையில் துப்பாக்கிச் சூடு கடந்த செவ்வாயன்று இடம்பெற்றது.

உயிரிழந்தவர்களில் 16 வயது சிறுவனும், 17 மற்றும் 14 வயதுகளையுடைய சிறுமிகளும் உள்ளடங்குவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



15 வயதுடைய சந்தேக நபர், அரை தானியங்கி கைத்துப்பாக்கி மூலம் 15 முதல் 20 வரை துப்பாக்கிச் சூட்டினை நடத்தியதாக மிச்சிகன் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தாக்குதலின் நோக்கம் உடனடியாகத் தெரியாத நிலையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (நி)

## இரண்டாம் உலகப்போரில் பயன்படுத்தப்பட்ட குண்டுவெடிப்பு

### நால்வர் காயம்

(பெர்லின்)

ஜேர்மனியின் முனிச் நகரில் ரயில் நிலையம் ஒன்றில் தோண்டுதல் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டிருந்தவேளை 2ஆம் உலகப் போரின் போது வீசப்பட்ட குண்டு திடீரென வெடித்ததில் 4 பேர் காயமடைந்தனர்.

ஜேர்மனியின் முக்கிய பகுதிகளில் ஒன்றான முனிச் நகரில் டோனர்ஸ்பெர்கர்ப்ரூக் ரயில் நிலையம் அமைந்துள்ளது. அங்கு தற்போது கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதையொட்டி ரயில் நிலையம் அருகே, துளை யிடும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டிருந்தனர். அப்போது 2ஆம் உலகப் போரின்போது வீசப்பட்ட வெடிக்காத குண்டு ஒன்று திடீரென வெடித்து சிதறியது. இதில், 4 பேர் காயமடைந்தனர்.

உலகப் போர் முடிந்து 76 ஆண்டுகள் கடந்தும் தற்போதும் ஜேர்மனியில் வெடிக்காத வெடிகுண்டுகள் அவ்வப்போது கண்டறியப்பட்டு வருகின்றன.

ஜேர்மனியில் ஆண்டொன்றுக்கு 2000 தொன் இரண்டாம் உலகப் போரின்போது வீசப்பட்ட வெடிகுண்டுகள் கண்டெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## வாழ்க்கைச் செலவு அதிகமான நகரங்களில் இஸ்ரேலின் டெல் அவிவ் முதலிடம்

(ஜெருசலேம்)

உலகில் வாழ்க்கைச் செலவு அதிகமான நகரங்களின் பட்டியலில் பாரிஸ், சிங்கப்பூர் மற்றும் சூரிச் நகரங்களைப் பின்னுக்கு தள்ளி இவ்வாண்டில் இஸ்ரேலின் டெல் அவிவ் நகரம் முதலிடம் பிடித்துள்ளது.

உலக நாடுகளில் உள்ள பெரிய நகரங்களின் வாழ்க்கைச் செலவினம் குறித்து 173 நகரங்களில் உலகப் பொரு[illegible] நடத்தி அறிக்கை தயாரித்துள்ளது.

இந்நிலையில் 2021 அதிக வாழ்க்கைச்செலவினம்கொண்ட நாடுகள் பட்டியலில் டெல் அவிவ் நகரம் முதலிடம் பிடித்துள்ளது.

2020 ஆம் ஆண்டுக்கான பட்டியலில், பாரிஸ், சூரிச், ஹொங்கொங் ஆகிய நகரங்கள் கூட்டாக முதலிடத்தில் இருந்தன.

இந்த ஆண்டு பட்டியலில் பாரிசும், சிங்கப்பூரும் கூட்டாக இரண்டாவது இடத்திலும், சூரிச், ஹொங்கொங், நியூயோர்க் 6ஆவது இடத்திலும், ஜெனீவா 7 ஆவது இடத்திலும் உள்ளன. லொஸ் ஏஞ்சல்ஸ் 9ஆவது இடத்திலும், ஒசாகா 10 ஆவது இடத்திலும் உள்ளன.

கொரோனா காரணமாக சமூகக் கட்டுப்பாடுகள் பொருட்களின் விநியோகத்தை சீர்குலைத்தது. இது பற்றாக்குறை மற்றும் விலை உயர்வுக்கு வழி வகுத்துள்ளது. இந்த ஆண்டு வாழ்க்கைச் செலவு குறியீட்டில் இதன் தாக்கத்தை காண முடிகிறது என இந்த பட்டியலைத் தயாரித்த பொருளாதார நிபுணர் குழுவின் சர்வதேச தலைவர் உபாசனா தத் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் எச்.ஐ.வி. தொற்று அதிகரிக்கும் அபாயம்

## விசேட மருத்துவர் தக்சாயினி தெரிவிப்பு

(மன்னர்)

**இந்தியாவுக்கு சட்டவிரோதமாக கடல் வழியாக சென்று வருபவர்கள், மற்றும் போதைப்பொருள் பாவனையினாலும் மன்னார் மாவட்டத்தில் எச்.ஐ.வி தொற்று அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக பாலியல் நோய் மற்றும் எச்.ஐ.வி விசேட மருத்துவர் அதிகாரி தக்சாயினி மகேந்திரநாதன் தெரிவித்தார்.**

உலக எய்ட்ஸ் தினத்தை யொட்டி மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவுக்கு சட்டவிரோதமாக கடல் வழியாக சென்று வருகின்றவர்கள், மற்றும் போதைப்பொருள் பாவனையினாலும் மன்னார் மாவட்டத்தில் எச்.ஐ.வி தொற்று அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றது.

இதனை கட்டுப்படுத்த சுகாதாரத் துறையினர் தமது தடுப்பு நடவடிக்கை வேலைத்திட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர். குறித்த நடவடிக்கைகளுக்கு மக்களுடைய ஆதரவை எதிர்பார்த்துள்ளோம். மக்கள் இவ்விடயத்தில் விழிப்புடன் இருந்து எமது சுகாதார துறைக்கு ஆதரவு வழங்க வேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் 1987 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை 11 எச்.ஐ.வி தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். என தெரிவித்தார். (4-285)

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு போட்டிகள்

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பொது நூலகத்தினால் பாடசாலை மட்டத்திலும், பாடசாலைக்கு வெளியேயும் போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

பிரிவு 1(10-12 வயது), பிரிவு 02-(13-14 வயது) , பிரிவு 03-(15-30வயது) ஆகிய மட்டங்களில் கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டி, சிறந்த வீட்டு நூலகம் மற்றும் சிறந்த வீட்டுத் தோட்டப் போட்டிகளை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் தங்களது பெயர் விபரங்களை சாவகச்சேரி பொது நூலகத்தில் ,வழங்கி போட்டிக்கான நிபந்தனைகளையும் பார்வையிட முடியும்.

அத்துடன் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இலவச நூலக அங்கத்துவமும் நூலகத்தால் வழங்கப்படுவதனால் வாசகர்கள் இலவச நூலக அங்கத்துவத்தைப் பெற்று பயனடையுமாறும் நூலகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (4-5-30)

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் 2022 பாதீடு நிறைவேற்றம்

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சபையின் விசேட கூட்டம் நேற்று வியாழக்கிழமை தவிசாளர் த.ஐங்கரன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது 31 உறுப்பினர் கொண்ட சபையில் 27 உறுப்பினர்கள் பங்குபற்றிய நிலையில் அனைவரும் பாதீட்டில் ஆதாரவாக வாக்களித்தனர். (4-60)

# காணிப்பிணக்கு கைகலப்பில் முடிந்தது

## நான்கு பேர் படுகாயம்

(குருமன்காடு)

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் காணித்தகராறு காரணமாக ஏற்பட்ட கைகலப்பில் மூன்று பெண்கள் உட்பட 4 பேர் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, கூமாங்குளம், முருகையா குளத்திற்திற்கு செல்லும் வீதியில் குடும்பம் ஒன்று வசித்து வரும் காணிக்குள் நுழைந்து அடாத்தாக கொட்டகை ஒன்றை போடுவதற்கு சிலர் முயன்றுள்ளனர்.

இதனை குறித்த காணியில் வசித்து வந்தோர் தடுத்து நிறுத்த முற்பட்ட போது வாய்த்தர்க்கம் ஏற்பட்டதுடன், தடுக்க சென்றவர்கள் மீது அங்கு வந்தவர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த தாக்குதலில் தாய், பிள்ளைகள் என மூன்று பெண்கள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். (4-5-250)

### ஹனுமத் ஜெயந்தி இலட்சார்ச்சனை பெருவிழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர்கோயில்ஹனுமத்ஜெயந்தி இலட்சார்ச்சனைப் பெருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் ஜனவரி 1ஆம் திகதி வரை நடை பெறவுள்ளது. எனவே அடியார்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி வருகை தருமாறு ஆலய ஆதினகர்த்தா சிவ ஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்கள் அறிவித்துள்ளார். (4)

## ஏல விற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தினால் அரசுடைமையாக்கப்பட்ட மின் மோட்டார்கள், துவிச்சக்கரவண்டிகள், மின்பிறப்பாக்கிகள், காஸ் சிலிண்டர்கள், கைத்தொலைபேசிகள், குளிர்சாதனப்பெட்டி, மண்வெட்டிகள், சவல்கள், கோடரிகள் மற்றும் ஏனைய பொருட்களின் பகிரங்க ஏல விற்பனையானது எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

## நினைவுதின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையினால் கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 57 ஆவது நினைவு தின நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்.மாவட்டக் கூட்டுறவுச்சபை தலைவர் தி.சுந்தர [illegible] தலைமையில் [illegible] (4)

# திருமறைக் கலாமன்ற தினம் இன்று

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் 57 ஆண்டின் ஆரம்பத்தையும், ஸ்தாபக இயக்குநர் அமரர் நீ.மரிய சேவியர் அடிகளாரின் 82 அகவையையும் நினைவு கூர்ந்து திருமறைக் கலாமன்றத்தால் பல நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இன்று காலை 6.30 மணிக்கு இல.17 மார்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைஞான சுரபி தியான இல்லத்தில் நன்றி வழிபாடும், தொடர்ந்து காலை 9.30 மணிக்கு இல 238,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது மணி மண்டபத்தில் இரத்த தானம் வழங்கும் நிகழ்வும் இடம் பெறும்.

மாலை நிகழ்வாக அமரர் நீ.மரிய சேவியர் அடிகளாரை அவரது பிறந்த நாளில் நினைவுகூரும் முகமாக " மரிய சேவியர் அடிகளாரின் நினைவுகளுடன் சிறு பொழுது..." என்னும் நிகழ்வு மாலை 5.00 மணிக்கு இல,286,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெறும். (4-18)




கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் கனடாவில் வசிக்கும் டொனால்ட் தம்பதிகளின் நிதியுதவியில் 19 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு சுய தொழில் ஊக்குவிப்பு நன்கொடை நிதியாக ஒவ்வொரு குடும்பத்திற்கு 15 ஆயிரம் ரூபாய் வழங்கும் நிகழ்வு கடந்த 30ஆம் திகதி உரும்பிராயில் இடம்பெற்றது.

# நெடுங்கேணி குளத்தின் அணைக்கட்டில் சேதம்

(அக்கராயன்)

வவுனியா வடக்கின் நெடுங்கேணி குளத்தின் அணைக்கட்டில் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக இக்குளத்தின் கீழான விவசாயிகளினால் தெரிவிக்கப்படுகின்றது.

குளத்தின் அணைக்கட்டின் நடுப்பகுதியின் வெளிப்புறத்தில் அணைக்கட்டு சேதமடைந்துள்ளது.

கடந்த ஆண்டு இப்பகுதியில் 1,200 இற்கு மேற்பட்ட மண் மூடைகள் அடுக்கப்பட்டு அணை பாதுகாக்கப்பட்டதாகவும் அதே பகுதியில் அணைக்கட்டில் தற்போது சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் நெடுங்கேணி குளத்தில் இருந்து 132 ஏக்கருக்கு நீர்ப்பாசனம் மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கும் விவசாயிகள் இக்குளத்தினை புனரமைப்பதற்கு கமநல சேவை நிலையம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தனர். (4-5-350)

# குளத்தின் நீர் திறக்க பயன்படும் கதவு திருட்டு

(தருமபுரம்)


கிளிநொச்சி புளியம் பொக்கணை கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட புன்னைநீராவி பகுதியில் அமைந்துள்ள கருக்காய் குளம் குளத்தின் தண்ணீர் திறக்க பயன்படும் ரூபாய் ஒரு இலட்சம் பெறுமதியான கதவு கடந்த 30 ஆம் திகதி திருடப்பட்டது.

இக்குளத்தில் நீரை சேமித்து வைப்பதன் மூலம் 150 வரையான குடும்பங்கள் பயன் பெறுவதுடன் பெருமளவு பயிர்ச் செய்கையும் மேற்கொள்ளப் படுகின்றது.

எனவே மிக விரைவில் இக்கதவினை மீள பொருத்தப்படாவிட்டால் முற்று முழுதாக தண்ணீர் வெளியேறி விடும் நிலை ஏற்படும். இதனால் பாரிய தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று சர்வதேச வலுவிழந்தோர் தினம்



சமவாய்ப்பு என்பது வழக்கொழிந்து போய் சமத்துவமும் பன்மைத்துவமும் என்பதே வளர்ச்சி கண்ட சமூகங்களின் தாரக மந்திரமாக மாறியுள்ள இக்கால கட்டத்திலும் இலங்கையில் குறிப்பாக தமிழ் சமூகத்தின் மத்தியில் இவை பற்றிய விழிப்புணர்வு போதுமானதாக இல்லை.

பல்வேறு வகைப்பட்ட கலாசார, சமூக, பொருளாதாரப் பின்னணிகளில் இருந்து வருவோருக்கு வளங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அனைவருக்கும் சமவாய்ப்பு என்ற அடிப்படையில் திட்டங்கள் வகுக்கப்படுமானால் அந்நாடுகளில் அவ்வளங்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஆற்றல் உள்ளவர்களால் மட்டுமே அவற்றைப்பெற்றுக்கொள்ள முடியும்.

அதற்கான ஆற்றல் இல்லாதவர்களுக்கு சமவாய்ப்பு என்பதற்கு எவ்வித அர்த்தமும் கிடையாது. இந்தப் பின்னணியிலேயே சமவாய்ப்பு என்பது காலாவதியாகி சமத்துவமும் பன்மைத்துவமும் சமூக முன்னேற்றத்திற்கான அடிப்படைகளாக மாறின.

வயது, உடல் ஊனம், பால் மீள் தேர்வு, திருமணமும் சேர்ந்து வாழ்தலும், தாய்மையும் மகப்பேறும், இனம், சமயம், பால். இவ்வளவு சட்டப் பாதுகாப்பும் இருந்த போதும் கூட, ஊனமுற்றவர்கள் நாளாந்தம் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தே வருகின்றனர்.

அப்படி இருக்கையில் இலங்கை போன்ற நாடுகளில், குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களில் ஊனமுற்றவர்களின் வாழ்க்கை என்பது எமது கற்பனைக்கும் எட்டாத துன்பகரமானது என்றால் மிகையல்ல.

"ஊனமுற்றவர் என்றால் அவர் உடல் அல்லது மூளைச் செயற்பாடுகளில் அறிவு சார்ந்தோ அல்லது இல்லாமலோ குறையுடையவராக தனது வாழ்க்கையை தானே முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ கவனிக்க முடியாதவராக இருப்பார்" என வரையறுக்கின்றது.

2012 இல் இலங்கையில் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணக்கெடுப் பின்படி ஆறு வகையான செயற்பாட்டு குறைபாடுகள் இனம் காணப்பட்டுள்ளன. பார்வை, கேட்டல், இயக்கம், மூளைத் திறன், நாளாந்த செயற்பாடு, தொடர்பாடல் ஆகிய குறைபாடுகள். இலங்கையில் 16 இலட்சத்திற்கு அதிகமானவர்களுக்கு இவ்வாறான குறைபாடுகள் உள்ளன. இவர்களில் பெரும்பான்மையானவர்கள் பார்வைக் குறைபாடடனும் நடந்து இயங்க முடியாதவர்களாகவும் உள்ளனர்.

இக்குறைபாடுகள் பெண்களில் கணிசமான அளவு அதிகமாகக் காணப்படுகின்றது. ஒவ்வொரு ஆயிரம் பேரில் 87 பேர் குறைபாடுடையவர்களாக உள்ளனர். 57 வீதமான பெண்களும் 43 வீதமான ஆண்களும் குறைபாடுடையவர்களாக உள்ளனர்.

குறைபாடுகளுடன் வாழ்வது என்பதே மிகக் கடினமானதாக இருக்கின்ற போது, அவ்வாறு பாதிக்கப்பட்டவர் பெண்ணாகவும் இருக்கின்ற போது, அதன் பாதிப்பு அதீதமாக இருக்கும்.

மேலும் வயதோடு இந்தக் குறைபாடுகளின் எண்ணிக்கையும் விகிதாசாரமும் அதிகரித்துச் செல்கின்றது. வயோதிபர்களிடையேயே குறைபாடுகளின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகின்றது.

குறைபாடுகளுடன் உள்ள 16 இலட்சம் பேரில் மூன்றில் ஒரு பகுதியினர் மட்டுமே பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். மற்றைய மூன்றில் இரண்டு பகுதியினர் தங்கி வாழ வேண்டிய நிலையிலேயே உள்ளனர்.

வெளிநாடுகளில் உள்ள பொருளாதார, சட்டப் பாதுகாப்புகள் இலங்கையில் கிடையாத நிலையில், அங்குள்ள குடும்ப உறுப்பினர்களில் தங்கி வாழ்வதென்பது குடும்ப உறுப்பினர்களுக்கு சுமையாகவும் அதன் காரணமான நெருக்கடிகளுக்கும் ஏச்சுக்களுக்கும் பேச்சுக்களுக்கும் இவர்கள் முகம்கொடுக்க வேண்டியுமிருக்கின்றது.

இந்த மூன்றில் இரண்டு பகுதியினரில் அரைவாசிப்பேர் வருமானம் இல்லாத வீட்டு வேலைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் அதேவேளை, மற்றைய பகுதியினர் வயோதிபம் காரணமாக வேலை செய்ய முடியாதவர்களாக உள்ளனர்.

1981 இல் ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை ஐந்தரை இலட்சமாக இருந்து 1992 இல் ஏழு இலட்சமாக உயர்ந்து 2012 இல் 16 இலட்சமாக உயர்ந்தது. நாட்டில் இடம்பெற்ற மூப்பது ஆண்டுகால உள்நாட்டு யுத்தம் இந்த ஊனமுற்றவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாக இருந்துள்ளது.

மேலும் போசாக்கு குறைபாடு, வீதி விபத்துக்களும் தற்போது குறைபாடுகளை ஏற்படுத்துவதில் முக்கிய காரணிகளாக உள்ளன.

இலங்கையிலும் ஊனமுற்றவர்களைப் பாதுகாப்பதற்கான சட்டதிட்டங்கள் சில இருந்த போதும் சில அடிப்படைப் பொருளாதாரப் பாதுகாப்புகள் செய்யப்பட்டு இருந்தாலும் அவை பாதிக்கப்பட்டவர்களைச் சென்றடையவில்லை என்பதே உண்மை.

மேலும் இத்திட்டங்களை அறிந்துகொள்வதற்கான ஆற்றலோ கல்வித் திறனோ பாதிக்கப்பட்டவர்களிடம் இல்லை. இதனை பாதிக்கப்பட்டவர்களிடம் கொண்டு செல்வதற்கான செயற்றிட்டங்களும் பெயரளவில் இருந்தாலும்கூட அவை நடைமுறையில் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்தப் பின்னணிகளில் ஊனமுற்றவர்களின் குறைபாடுடையவர்களின் நிலை இலங்கை போன்ற நாடுகளில் எவ்வாறு இருக்கும் என்பதை கற்பனை செய்து பார்க்க முடியும்.

ஊனமுற்றவர்கள் குறைபாடுடையவர்கள் (மாற்றுத் திறனாளிகள்) சார்பில் சமூக மட்டத்தில் அரோட் AROD போன்ற சில அமைப்புகள் உருவாகி செயற்பட்டு வந்தாலும் அங்குள்ள தேவைகளோடு ஒப்பிடுகின்றபோது இவை வறண்ட நிலத்தில் விழுகின்ற மழைத்துளி போன்றதே.

**என்.செல்வராஜா, லண்டன்**

# கப்பலில் வைத்தே எரிவாயு பரிசீலனை

(கொழும்பு)

நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் சமையல் எரிவாயுவினை துறைமுகத்திற்குள் கொண்டு வருவதற்கு முன்னர் கப்பலில் வைத்தே அதன் தரம் தொடர்பில் ஆராயப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவண்ண தெரிவித்தார்.

இந்த நடைமுறை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அமுல்படுத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நேற்று முன்தினமும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் சமையல் எரிவாயுவுடன் தொடர்புடைய வெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், இது வரை பதிவான வெடிப்பு சம்பவங்களில் சமையல் எரிவாயு கொள்கலன்களுக்குச் சேதம் ஏற்படவில்லையெனவும் சமையல் அடுப்புகள் மற்றும் எரிவாயு குழாய்களுக்கே சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 380 | 400 | 320 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 350 | 250 |
| தக்காளி | 500 | 550 | 400 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 200 | 330 | 320 | 350 |
| கரட் | 260 | 340 | 320 | 350 |
| பூசணி | 60 | 60 | 60 | 60 |
| புடோல் | 280 | 280 | 240 | 300 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 240 | 240 |
| பெரிய வெங்காயம் | 200 | 160 | 160 | 160 |
| பாகற்காய் | 500 | 580 | 500 | 800 |
| வெண்டிக்காய் | 250 | 260 | 200 | 280 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 130 | 150 |
| பயற்றங்காய் | 600 | 500 | 300 | 400 |
| லீக்ஸ் | 350 | 280 | 320 | 350 |
| பீற்றூட் | 120 | 160 | 140 | 200 |
| கறிமிளகாய் | 500 | 450 | 600 | 450 |
| முருங்கைக்காய் | 800 | 500 | -- | 800 |
| போஞ்சி | 320 | 300 | 200 | 250 |
| கத்தரிதம்புள்ள | 300 | 350 | 320 | 350 |
| கீரை - 1 பிடி | 100 | 90 | 150 | 100 |
| தேசிக்காய் | 300 | 350 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 240 | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | -- | 450 | -- | -- |
| முள்ளங்கி | 160 | 160 | -- | 250 |
| பொன்னாங்காணி | 50 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 25 | 250 | 40 | 40 |
| ஈரப்பலா | 80 | 150 | -- | 160 |

### இரசாயனம் அடங்கிய எண்ணெய்

# குற்றஞ்சாட்டப்பட்ட நிறுவனம் மீண்டும் எண்ணெய் இறக்குமதி

(கொழும்பு)

புற்றுநோயை ஏற்படுத்தும் இரசாயனம் அடங்கிய தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்ததாக குற்றம் சுமத்தப்படும் நிறுவனம் மீண்டும் அதே வர்த்தக பெயரில் தேங்காய் எண்ணெயை சந்தைக்கு விநியோகிக்க ஆரம்பித்துள்ளதாக அகில இலங்கை பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அகில இலங்கை பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் புத்திக டி சில்வா மேலும் தெரிவிக்கையில்,

குறித்த நிறுவனத்திற்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கும் இன்னும் முடிவடையவில்லை.

இப்படியான நிலைமையில், அந்த நிறுவனம் எந்த அனுமதியின் கீழ் மீண்டும் தேங்காய் எண்ணெயை இறக்குமதி செய்து, விநியோகம் செய்கிறது என்பது பிரச்சினைக்குரியது.

விஷத்தன்மையான இரசாயனம் அடங்கிய தேங்காய் எண்ணெய் சந்தையில் விற்பனை செய்யப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது.

இவ்வாறான நிலைமையில் தான் செய்த தவறை ஒப்புக்கொள்ளாத நிறுவனம் ஒன்றுக்கு நுகர்வோர் அதிகார சபை எப்படி இவ்வாறான அனுமதியை வழங்கியது என கேள்வி எழுப்பியுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத பணப்பரிமாற்றம்;

## ஈடுபடுபவர்களின் கணக்குகள் முடக்கப்படும்

### மத்திய வங்கி ஆளுநர் எச்சரிக்கை



**(கொழும்பு) சட்டவிரோதமான முறையில் பணப் பரிமாற்றம் செய்பவர்களின் வங்கிக் கணக்குகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் முடக்கப்படும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்தார்.**

அனைத்து புலம்பெயர்ந்த இலங்கை மக்கள் தங்களின் உழைப்பினூடாக ஈட்டிய வருமானத்தை திருப்பி அனுப்புவதற்கு சட்ட ரீதியான வழிமுறைகளை மாத்திரம் பயன்படுத்துமாறும் அவர் கோரிக்கை விடுத்தார். (நி)

# கடனை செலுத்த காணிகளை விற்கும் அரசு

### அம்பலப்படுத்திய எதிர்க்கட்சி

(கொழும்பு)

நாடு வெறுமையான நிலைக்கு சென்றுள்ளது. நாட்டின் .மொத்த தேசிய வருமானம், கடனைகளை திருப்பி செலுத்தவும் போதுமானதாக இல்லை என்ற நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

பெற்ற கடன்களை கட்டித் தீர்க்க முடியாத நிலைமையில் அரசாங்கம், கொழும்பில் உள்ள பெறுமதியான சகல காணிகளை விற்பனை செய்ய, லைன்திவா என்ற நிறுவனத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் இந்த காணிகளை விற்பனை செய்வதன் மூலம் 400 மில்லியன் டொலர்களை சம்பாதிக்கவே எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இது மிக குறைந்த வருவாய் எனவும் அசோக அபேசிங்க குறிப்பிட்டார். (நி)

# பேருந்து கட்டணத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

பேருந்து கட்டணத்தை குறைந்தபட்சம் 5 ரூபாயினால் அதிகரிக்குமாறு தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கங்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, ஆக குறைந்த பேருந்து கட்டணம் 20 ரூபாயாக அதிகரிக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த கட்டண அதிகரிப்பினை செய்யுமாறும் அவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இலங்கையில் நாளுக்கு நாள் எரிவாயு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான விலைகள் அதிகரிக்கப்பட்டு வருகின்றமை காரணமாக மக்கள் பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# ரூபாவாக மாற்றப்படும் டொலருக்கான ஊக்குவிப்புத் தொகை அதிகரிப்பு

### இலங்கை மத்திய வங்கி தீர்மானம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் பணிபுரியும் தொழிலாளர்களால் அனுப்பப்படுகின்ற பணம் இம்மாத காலப்பகுதியில் இலங்கை ரூபாவாக மாற்றப்படும்போது ஒரு டொலருக்கான ஊக்குவிப்புத் தொகையாக 10 ரூபாவைக் கொடுப்பனவு செய்வதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

மத்திய வங்கியின் நாணயச்சபையினால் "உள்முக தொழிலாளர் பணவனுப்பல்கள் மீதான ஊக்குவிப்புத் திட்டத்தின்" கீழ் வெளிநாடுகளிலிருந்து அனுப்புகின்ற பணம் இலங்கை ரூபாயாக மாற்றப்படும் போது அதற்கான ஊக்குவிப்புத்தொகையாக ஒரு அமெரிக்க டொலருக்கு 2 ரூபா வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த 2 ரூபாவிற்கு மேலதிகமாக நேற்று முன்தினம் முதலாம் திகதியிலிருந்து எதிர்வரும் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் உரிமம்பெற்ற வங்கிகள், சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏனைய வழிமுறைகள் ஊடாக வெளிநாடுகளிலிருந்து தொழிலாளர்கள் அனுப்புகின்ற பணம் இலங்கை ரூபாவாக மாற்றப்படுகின்ற போது ஒரு அமெரிக்க டொலருக்கான ஊக்குவிப்புத்தொகையாக 8 ரூபாவை வழங்குவதற்கு மத்திய வங்கியின் நாணயச்சபை தீர்மானித்துள்ளது.

அதன்படி வெளிநாடுகளில் பணிபுரிவோரால் அனுப்பப்பட்ட பணம் இம்மாதகாலத்தில் இலங்கை ரூபாய்களாக மாற்றப்படுமாயின், ஏற்கனவே வழங்கப்பட்டுவரும் 2 ரூபாய்க்கு மேலதிகமாக தற்போது வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள 8 ரூபாவையும் இணைத்து அமெரிக்க டொலர் ஒன்றுக்கான ஊக்குவிப்புத்தொகையாக 10 ரூபா கொடுப்பனவு செய்யப்படும்.

இந்த மேலதிக ஊக்குவிப்புத்தொகையை வழங்குவதன் ஊடாக வெளிநாடுகளில் பணிபுரிபவர்கள் எமது நாட்டிற்கு அனுப்பும் பணத்தின் அளவை உயர்த்த முடிவதுடன் அதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு செலாவணிச்சந்தையின் திரவத்தன்மையினை அதிகரிக்கமுடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

# இன்று ஒரு தகவல்

## சும்மா இருப்பதாவது!

நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்கிறார்கள். ஒருவன் தான் உயர்ந்துவிட்ட பிரதாபத்தை வார்த்தைக்கு வார்த்தை அள்ளித் தெளிக்கிறான். மற்றவன் தன் நிலைமையச் சொல்லிக் கொள்ளவே நாணுகிறான். முன்னவன் காலத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டவன். பின்னவன் அதன் அருமையை உணராதவன்.

Idle man's brain is the devils workshop என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. மிகப் பொருத்தமான பழமொழி!

ஒன்று ஒருவர் உடல் இயங்கிக் கொண்டிருக்க வேண்டும். அல்லது உள்ளமானது ஆக்கபூர்வமான சிந்தனையில் இறங்க வேண்டும்.

வேலையில்லாதவர்கள் அதைப் பெற முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும்.

பெண்கள் வீட்டுக்குப் பயன்தரக்கூடிய செயல்களில் ஈடுபட வேண்டும்.

ஒரு வேலையும் இல்லை. எல்லாம் முடிந்தாகி விட்டது என்று சொல்பவர்கள் மற்றவர்களுக்கு எவ்வகையிலேனும் உதவலாம். பயனுள்ள நோக்கத்தோடு நண்பர்களைச் சென்று பார்க்கலாம். என்ன செய்வதென்று தெரியாதவர்கள் படிக்கும் பழக்கத்தையாவது ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

வீணான பேச்சும் வெறுமனே உட்கார்ந்திருப்பதும் சற்றும் நல்லவையல்ல. காலத்தை வீணாக்கியவர்கள் உயர்வடைந்ததாக வரலாறே கிடையாது.

நாள் காட்டியின் ஒவ்வொரு சீட்டைக் கிழிக்கும் போதும் ஒரு நாள் கடந்து விட்டதே என்பதை அறிவுபூர்வமாக உணர வேண்டும்.

வாழ்க்கையில் திரும்பப் பெற முடியாதவை நேரமும் உயிரும் தான். இரண்டாவது நம் அறிவுக்கு அப்பாற்பட்ட விடயம்.

ஆனால் திரும்பப் பெற முடியாத நேரத்தைப் பயனுள்ள வழிக்காகச் செலவழித்து மனமகிழ்ச்சி அடைவது என்பது நமக்கு உட்பட்ட விடயம். வாழ்க்கையின் மூலப்பொருள் நேரம் தான். அதை வீணாக்குவது நாமாக நம் உயிரைப் போக்கிக் கொள்ளும் தற்கொலை முயற்சிக்குக் கீழான முயற்சியாகும்.

கடந்தவற்றை நினைத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பது வீண். பெரும்பாலானவர்களின் நேரம் இப்படியே வீணாகிறது. கடந்து போன வாழ்க்கையின் அனுபவங்கள் மட்டும் தான் நம்மிடம் மிஞ்ச வேண்டும். மற்றவற்றை எண்ணுவது வீண் வேலை.

இன்றே வாழ்வின் இறுதி நாள் என்று டாக்டர் அறிவித்து விட்டால் ஒருவன் தனக்கிருக்கும் கடமைகளை முடிச்சு எப்படிப் பறப்பான்! ஒவ்வொரு நாளையும் அப்படி எண்ணிச் செயற்பட வேண்டும்.

உயர்வடைய வேண்டும், புகழ்பெற வேண்டும் என்றெல்லாம் இலட்சிய நோக்கம் கொள்பவர்கள் காலத்தை வீணாக்குவதில்லை.

கல்வித்துறையில் உள்ளவர்கள் காலத்தைக் கொண்டு அறிவுப் பெருக்கத்திற்கு அடிகோலுகிறார்கள், தொழில் புரிபவர்கள் காலத்தைப் பணமாக்குகிறார்கள். திறமை உள்ளவர்கள் காலத்தைப் புகழாக மாற்றிக்கொள்கிறார்கள். உடற்பயிற்சி செய்பவர்கள் காலத்தைத் தங்கள் பலமாக ஆக்கிக் கொள்கிறார்கள்.

சும்மா இருப்பவர்களோ காலதேவனின் கோரப்பிடிக்குள் சிக்கித் தவிக்கிறார்கள்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## சவாலே சமாளி

ஆரவல்லி மலைக் காட்டில் குளம் ஒன்று இருந்தது. அதில் ஆமை ஒன்று வாழ்ந்து வந்தது. அந்த ஆமை குளக் கரையில் நடந்து சென்று கொண்டிருந்தது.

அதன் எதிரில் பெண் புலி ஒன்று வந்தது. "பெண் புலியே! வணக்கம்!"" என்றது ஆமை.

பதிலுக்கு அந்தப் புலி வணக்கம் சொல்லவில்லை. அதன் வணக்கத்தை ஏற்றுக் கொள்வது போலத் தலையை அசைத்தது.

"நான் வணக்கம் சொன்னேன். நீ வணக்கம் சொல்லாமல் தலையை அசைக்கிறாயே" என்று கோபத்துடன் கேட்டது ஆமை.

"இந்தக் காட்டில் நானும், என் கணவரும் வலிமையானவர்கள் எங்களுக்கு அஞ்சி நீங்கள் வணக்கம் சொல்கிறீர்கள். நாங்கள் யாருக்கும் வணக்கம் சொல்ல வேண்டியது இல்லை" என்று ஆணவத்துடன் சொன்னது பெண் புலி.

இதைக் கேட்டு எரிச்சல் அடைந்த ஆமை, "உனக்கு வலிமை அதிகமா? உன் கணவருக்கு வலிமை அதிகமா?" என்று கேட்டது.

"என் கணவருக்குத் தான் வலிமை அதிகம்" என்றது பெண் புலி. "உன் கணவரின் முதுகில் நான் சவாரி செய்து காட்டுகிறேன். அவர் குதிரை போல என்னைச் சுமந்து வருவார்.



இதை நீ பார்க்கத் தான் போகிறாய். அதன் பிறகு உன் ஆணவம் அடங்கும். எல்லோருக்கும் வணக்கம் செலுத்துவாய்" என்றது ஆமை.

கோபத்துடன், தன் கணவரிடம் வந்தது பெண் புலி. "அந்த ஆமை உங்கள் மேல் குதிரை போலச் சவாரி செய்யப் போகிறதாம். என்ன திமிர் இருந்தால், அது என்னிடமே சொல்லும். நீங்கள் அதற்குத் தகுந்த தண்டனை தர வேண்டும். அப்போது தான் என் உள்ளம் அமைதி அடையும்" என்றது.

"அப்படியா அந்த ஆமை சொன்னது? அதை இங்கே இழுத்து வந்து உன்னிடம் மன்னிப்பு கேட்க வைக்கிறேன். வர மறுத்தால், அது உயிருடன் இருக்காது" என்று கோபத்துடன் உறுமியது ஆண் புலி.

அங்கிருந்து புறப்பட்ட புலி, ஆமையைத் தேடி அலைந்தது. குளக் கரையில் ஆமையைப் பார்த்தது. "நீ என் மேல் குதிரை போலச் சவாரி செய்வதாகச் சொன்னாயா?"" என்று கோபத்துடன் கேட்டது. (தொடரும்)

# மகாபாரதம்



263

உன் அதிகாரத்திற்குட்பட்டவர்கள் மிக்க கொடியவர்களாக உள்ளனர். நீயோ பாம்புகள் நிறைந்த கிணறு போல் இருக்கிறாய்.

முட்புதர்கள் பின்னிப் படர்ந்து தண்ணீர் வெளியே தெரியா நதியாய் இருக்கிறாய். உடன் இருப்போரால் உனக்கு அழிவு நிச்சயம். உனது ஆட்சியின் மாட்சியையும் மக்களின் வாழ்க்கை முறையையும் அறிந்து கொள்ளவே இங்கு வந்தேன்.

நாடாளும் ஆசைகளை யும் ஐம்புலன்களையும் அடக்கி மக்களிடம் அன்புள்ளவனாக ஆட்சி செய்கிறாயா என்பதை அறிய முற்பட்ட போது உன்னிடம் பெரிய குற்றம் ஏதும் தெரியவில்லை.

ஆனால் அமைச்சர்கள் அப்படியில்லையே. அவர்கள் தாகத்திற்கு உதவாத தண்ணீர் போல உள்ளனர். நீயோ பசித்தவனுக்குக் கிடைத்த உணவு போல இருக்கிறாய்

உனது நன்மையை நாடுபவன் நான் என்பதை உணர்ந்த அமைச்சர்கள் என்னிடம் வெறுப்பு கொண்டுள்ளனர்.

அவர்கள் செய்த தவறுகளை நான் சுட்டிக் காட்டியதை நான் செய்த பெரிய குற்றமாகக் கருதுகின்றனர். நீயும் அவர்களிடம் சற்று விழிப்பாக இருக்க வேண்டும்" என்று கூறினார் முனிவர்.

மன்னன் முனிவரை நோக்கி, "உமது துன்பத்தை நான் போக்குகிறேன். நீர் இங்கேயே தங்கி இருக்கலாம். உம்மை வெறுப்பவரை நான் வெறுக்கிறேன்.

அவர்களுக்கு எத்தகைய தண்டனை தரப் போகிறேன் என்பதை பாருங்கள். நான் நீதியை நிலைநாட்டி மக்களுக்கு நன்மை செய்யத் தாங்கள் உதவி செய்ய வேண்டும்" என்றான்.

முனிவர் மன்னனிடம், "நீ காகம் கொல்லப்பட்ட செய்தியை வெளியே சொல்ல வேண்டாம். ஆனால் உனது அமைச்சர்களின் அதிகாரத்தைப் பறித்து விடு.

பின் ஏதோ ஒரு காரணத்தைக் கூறி அவர்களைக் கொலை செய். ஒரு குற்றத்தைப் பலபேர் சேர்ந்து செய்வாராயின் அவர்கள் தப்பித்து விடுவார்கள்.

பொருளின் தன்மையால் தான் ஒருவரிடம் செருக்குத் தோன்றுகிறது. அந்தப் பொருளை அப்புறப்படுத்தி விட்டால் அகங்காரம் குறையும். அறிவுடை அரசன் கருத்தை வெளியே சொல்லமாட்டான்.

மனதிலேயே வைத்திருப்பான். தீயவரைத் தீயவரைக் கொண்டே அழிக்க வேண்டும். இந்த ரகசியம் எங்கே வெளியே தெரிந்து விடுமோ என்றுதான் உனக்கு இவ்வளவு தூரம் சொல்ல வேண்டியதாயிற்று.

மக்கள் நலனை நான் பெரிதும் விரும்புகிறேன். வேந்தே! இப்போது என்னைப்பற்றி உரைக்கின்றேன்.. என் பெயர் காலக விருக்ஷயன் என்பதாம்.

உன் தந்தையும், என் தந்தையும் உற்ற நண்பர்கள். அந்தப் பிணைப்பு வழி வழியாய் தொடர வேண்டும் என விழைகிறேன். இப்போது நீ அரசன்.

உன் பகைவரை நீ நண்பன் எனக் கருத வேண்டாம் என மீண்டும் உரைக்கின்றேன். அரசாட்சியை அமைச்சரிடம் கொடுத்து விட்டு ஏன் துன்பம் அடைகிறாய்? அவர்களுக்கு அதிக அதிகாரம் கொடுப்பது தவறாகும்" என்றார். நல்லது கெட்டது உணர்ந்த கோசல நாட்டு மன்னனும் முனிவரின் நல் யோசனைகளை ஏற்று நாட்டை நன்கு ஆண்டான்.

"தருமா! உத்தம மான யோசனைகளை ஏற்றுக் கொள்ள யாரும் தயங்கக்கூடாது என்பதனையும், அதே நேரத்தில் தீயவர்களின் யோசனையை ஏற்கக் கூடாது என்பதனையும் இதன் மூலம் அறிவாயாக" என்றார் பீஷ்மர். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மேலான மனிதன் எப்போதும் அறம் பற்றியே சிந்திக்கிறான். பாமர மனிதன் சுகம் பற்றியே எண்ணுகிறான்!* – *கன்பூஷியஸ்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆரியகுளப் புனரமைப்பு தடைபல தாண்டிய சாதனை

யாழ்ப்பாணம் ஆரியகுளம் புனரமைக்கப்பட்டு மகிழ்வூட்டும் திடலாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசத்தின் தொல்லியல் அடையாளமாக விளங்கக்கூடிய ஆரியகுளம் இதுகாறும் கவனிப்பாரற்றிருந்தது.

நீர்த்தாவரங்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், பொலித்தீன் பைகள் என் எல்லாக் கழிவுகளையும் ஏந்திக்கொண்ட ஆரியகுளம் இன்று சொர்க்காபுரித் தடாகம்போல காட்சி தரு கிறது.

ஆரியகுளத்தை இவ்வாறாக மாற்ற முடியும் என்பதை நிரூபித்துக் காட்டிய யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் விசுவலிங்கம் மணிவண்ணன், குளத்தின் புனரமைப்புக்குக் கோடிக்கணக்கான ரூபாய்களை ஈகை செய்த தியாகி அறக்கொடை இயக்குநர் வாமதேவா தியாகேந்திரன் மற்றும் ஆரியகுளத்தைப் புனரமைப்பதற்கு ஒத்தாசை புரிந்த யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஒட்டுமொத்த உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், துறைசார் விற்பன்னர்கள் அனைவரும் பாராட்டுக்கும் போற்றுதலுக்குமுரியவர்கள்.

தனிநபர் ஒருவரின் நிதிப்பங்களிப்புடன் எம் தமிழர் தேசத்தின் வரலாற்றுச் சான்றாக இருக்கக்கூடிய ஆரியகுளத்தைப் புனரமைத்ததன் மூலம்; எங்கள் வரலாற்று ஆதாரங்களைக் காப்பாற்றுவதும் அதனை அழகுபடுத்துவதும் நாம் வாழுகின்ற இடத்தின் தூய்மை பாதுகாக்கப்பட்டு, அடுத்த சந்ததிக்குக் கையளிக்கப்பட வேண்டும் என்ற செய்தியும் நம் தேசத்து மக்களுக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

அதிலும் ஆரியகுளத்தைப் புனரமைக்கும் போது எழுந்த பல்வேறு பிரச்சினைகள், சவால்கள் சாதாரணமானவையல்ல.

அவை இந்த நாட்டின் அதிகாரம் பொருந்திய தரப்புகளோடு சம்பந்தப்பட்டவை. இருந்தபோதிலும் அவற்றை எதிர்கொண்டு எடுத்த கருமத்தை நிறைவேற்றுதல் என்ற மனத்திடத்துடன் செயற்பட்ட யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் விசுவலிங்கம் மணிவண்ணனின் பணி ஆரியகுள வரலாற்றுச் சான்றில் பதிவிடற்குரியது.

அதேநேரம் புனரமைப்புப் பணிகளுக்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கும் கட்சி பேதமின்றி – காழ்ப்புணர்வின்றி ஆதரவு வழங்கும்போது, அது எங்கள் மண்ணை பொலிவுபடுத்தி, எங்கள் இளம் சந்ததியை உத்வேகப் பாதையில் வழிப்படுத்துவதோடு,

தூய்மையின் பெறுமதியை, அழகின் அருமையை, எங்கள் தொல்லியல் சான்றாதாரங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வையும் நிச்சயம் ஏற்படுத்தும்.

## மாதகல் காணிகளை கடற்படைக்கு வழங்குவதாக தெரிவிக்கவில்லை

### வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - மாதகல் காணிகளை கடற்படைக்கு வழங்குவதாக தான் ஒருபோதும் கருத்து தெரிவிக்கவில்லை என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் கடற்படைக்கு மாதகல் காணிகளை வழங்குவதாக தெரிவித்ததாக சில ஊடகங்களில் நேற்று முன்தினம் செய்திகள் வெளிவந்திருந்தது. குறித்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) நான் காணி உரிமையாளர்களுடன் பேசுவதாக வெளியான செய்தி பிழையானது.

இன்றைய தினமே (நேற்று) முதன்முதலாக காணி உரிமையாளர்களுடன் நான் நேரடியாக கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளேன்.

காணி உரிமையாளர்களுடன் பேசி காணியின் உறுதிகளை சரிபார்த்து, காணி உரிமையாளர்களின் நிலைப்பாடுகளை அறிந்த பின்னரே முடிவுகளை எடுக்க முடியும் என தெரிவித்துள்ளார். (ம-3,33)

## திடீர் காய்ச்சல் காரணமாக கரவெட்டியைச் சேர்ந்த குடும்பஸ்தர் மரணம்

(கரணவாய்)

திடீர் காய்ச்சல் காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் மூன்றாம் கட்டை, துன்னாலை, கரவெட்டியைச் சேர்ந்த தெய்வகடாட்சம் ஜெயசீலன் (வயது-53) என்பவராவார்.

காய்ச்சல் காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர் நேற்று முன்தினம் புதன்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பாக பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு நெல்லியடி பொலிஸாருக்கு அறிவித்தார். (ம-3,60)

## திருகோணமலையில் குளவி கொட்டியதில் ஒருவர் உயிரிழப்பு

(திருகோணமலை)

திருகோணமலை- தென்னமரவாடி பகுதியில் குளவிக் கொட்டுக்கு இலக்கான நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த கனகசபை குகநாதன் (வயது-69) எனவும் தெரியவருகின்றது.

உயிரிழந்தவர் வீட்டிலிருந்து மாடு மேய்ப்பதற்காக சென்ற வேளை மரத்திலிருந்து குளவிக் கூடு கலைந்து குறித்த நபரைகொட்டியதாகவும் இதனை அடுத்து அவர் புல்மோட்டை தள வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 04 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** கலைவாணி வீதி பந்திங் செண்டர், கோப்பாய் கல்வியியல் கல்லூரி, கோண்டாவில் நீர் வழங்கல் சபை, கோப்பாய் இராணுவ முகாம், இராஜேஸ்வரி மண்டபம், பல்கலைக்கழக விடுதி, கலைவாணி- திருநெல்வேலி, கோண்டாவில் கிழக்கு, கிருஷ்ணன் கோவிலடி, பொற்பதி, புகையிரத நிலைய வீதி சந்தி, இராஜவீதி சந்தி, இராஜவீதி கோப்பாய், திருவெல்வேலி, வாமாஸ் வீதி, சுப்பர்மடம் ஐஸ் தொழிற்சாலை, மந்திகை மருத்துவமனை, தொலைத்தொடர்பு நிலையம் மாலுசந்தி, இலகடி, இன்பருட்டி, காந்தியூர், மாலுசந்தி, மந்திகை அம்மன் கோவில், அல்வாய், நாவலடி, ஸ்ரீலங்கா பாடசாலையடி, வியாபாரிமூலை, திக்கம், தேவரையாளி வதிரி, மனோ [illegible] இராணுவ முகாம், ஆழியவளை, கட்டைக்காடு, கட்டைக்காடு இராணுவ முகாம் (55ம் பிரிவு), கேவில், முள்ளியான், உடுத்துறை, வத்திராயன், வெற்றிலைக்கேணி, வெற்றிலைக்கேணி முள்ளியான் இராணுவமுகாம், வெற்றிலைக்கேணி கடற்படைமுகாம் ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** 11 இ.எஸ்.ஆர். இராணுவமுகாம், 12 சி.எல்.ஐ. இராணுவமுகாம், 6 இ.எஸ்.ஆர். இராணுவமுகாம், 59 ஆம் பிரிவு இராணுவமுகாம், 6 ஆவது எஸ்.எல்.ஏ.சி. இராணுவ முகாம், வற்றாப்பளை விமானப் படை முகாம் 1 மற்றும் 2, வற்றாப்பளை இராணுவ முகாம் இராணுவ முகாம் எரிபொருள் நிரப்பு நிலையம் .எப். எம்.ஏ. (எம்.எல்.டி) இராணுவ முகாம் நந்திக்கடல், ஹைட்ராமணி, வற்றாப்பளை விசேட அதிரடிப் படை தலைமையகம், வற்றாப்பளை, கேப்பாபிலவு, முள்ளியவளை, பிலாக்குடியிருப்பு ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** ஆச்சிபுரம், ஆசிக்குளம், எல்லப்பர் மருதங்குளம், எல்லப்பர் [illegible] கோவி[illegible]குளம் (சிதம்பரபுரம்), கூமரசங்குளம் மாதா கோவிலடி, மகாமயிலங்குளம், மதுரநகர், கல்நாட்டினகுளம், பெரிய கூமரசங்குளம், சமணங்குளம், சிதம்பரபுரம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** அச்சங்குளம், அடம்பன், அகத்திமுறிப்பு, அகத்திமுறிப்பு திட்டம், அளவக்கை, அளவக்கை சிறுகுளம் திட்டம், ஆண்டாங்குளம், அரிப்பு, அரிப்பு நீர்வழங்கல், ஆத்திமோட்டை, அறுகுக்குன்று, நொச்சிக்குளம், ஆத்திக்குழி, ஆவனம் வஞ்சியங்குளம், செம்மண்தீவு, இலந்தைமோட்டை, எருவிட்டான், ஹூசைனஸ் நகர், இத்திக்கண்டல், கண்ணாட்டி, கரடிக்குழி, கறுக்காய்க்குளம், காயக்குழி திட்டம், கொக்குப்படையான், கொண்டச்சி திட்டம், கொண்டச்சி நீர்வழங்கல் சபை, கொண்டச்சி சிங்கள கிராமம், கூழாங்குளம், கூழாங்குளம்திட்டம் (ஜீநாத் நகர்), குருவில், மடுக்கரை, மணல்குளம், மணற்குளம், மாந்தை சந்தி (திருக்கேதீஸ்வரம் கிராமம்), மறிச்சுக்கட்டி, மருதமடு, மாதோட்டம், மாவிலங்கேணி, மேதன்வெளி, மினுக்கன், முள்ளிக்குளம், முருங்கன், முருங்கன்பிட்டி, முசலி தேசிய பாடசாலையடி, நாகத்தாழ்வு, நானாட்டான், நறுவிலிக்குளம், நானாட்டான் பிரதேச செயலக அலுவலகத்தடி, நெடுங்கடல், மொபிட்டல் கோபுரம், பெரிய பொள்ளாச்சி, பொற்கேணி, பாலைக்குழி, பாலைக்குழி திட்டம், பாலைப்பெருமாள்காடு (மணல்மோட்டை), பள்ளகாமம், பள்ளங்கோட்டை, பள்ளிவாசல்பிட்டி, பாப்பைமோட்டை, பரப்பாங்கண்டல், பரப்புக்கடந்தான், பரிகாரிக்கண்டல், பெரிய நீலாச்சேனை, பெரிய பொள்ளாச்சிபொற்கேணி (பண்டாரவெளி), பிச்சைகுளம், பிச்சை வாணிபங்குளம் திட்டம், பிடாரிக்குளம், பொன்தீவு கண்டல்கள்ளிமோட்டை, புளியங்குளம், பொன்னாச்சி குளம், பூவரசங்குளம், புதுக்காமம் கிராமம், புதுக்குடியிருப்பு (சிலாவத்துறை), புதுவெளி, சின்ன பொள்ளாச்சி பொற்கேணி திட்டம், சாளம்பன், நாகச்செட்டி, சிலாவத்துறை, சூரிய கட்டைக்காடு, சொர்ணபுரி, சின்ன பொள்ளாச்சிபொற்கேணி, தம்பட்டமுசலி, திருக்கேதீஸ்வரம், திருக்கேதீஸ்வரம் மருத்துவமனை, உமணகிரி, உயிர்த்தரசங்குளம், வட்டக்கண்டல், வாழ்க்கைப்பட்டாங்கண்டல், வண்ணமோட்டைச் சந்தி, வெள்ளி மலை, அடம்பன் நீர்வழங்கல் சபை, சி.இ.சி.பி. (சிலாவத்துறை), சிலாவத்துறை கடற்படை முகாம், டொன் பொஸ்கோ, செம்மண் தீவு நீர்வழங்கல் சபை, செம்மண்தீவு நெற்களஞ்சியம், இறால் பண்ணை, பள்ளமடு, நீர்வழங்கல் முருங்கன், லைவ்ஸ்டாக்ப்ரீடர்ஸ் கோப் சொசைட்டி, செம்மண்தீவு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I


26

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்




சிரிலிக் எழுத்திற்கு மேல் போடப்படும் அடையாளம் அது எழுத்தல்ல எண்ணென்று அடையாளப்படுத்துவ்தற்காகப் போடப்படுகின்றது. ஒரு எண்ணின் ஆயிரம் மடங்கு என்பதைக் காண்பிப்பதற்கு உரு-20a யில் காட்டப்பட்ட முதலாவது அடையாளம் போடப்படும். மற்றைய மடங்குகளைக் காண்பிப்பதற்கு எண்ணைச் சுற்றி மற்றைய அடையாளங்கள் போடப்படும்.

**சிரிலிக் எண் முறைமை முதலில் பல்கேரிய சாம்ராஜ்யத்திலும் தெற்கு மற்றும் கிழக்கு ஸ்லாவிக் மக்களாலும் (Slavic peoples) பயன்படுத்தப்பட்டது. இந்த எண் முறைமை 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ரஷ்யாவிலும் பயன்படுத்தப்பட்டது. இது கிரேக்க எண்முறைமை ஒத்த ஒரு முறைமையாகும்.**




உரு 21 எத்தியோப்பியன் கீஸ் எண் (Ethiopian Geez number)




உரு 20a சிரிலிக் எண்முறைமை (Cyrillic numerals)

**எதியோப்பியன் கீஸ் எண் (Ethiopian Geez number) (3 ஆம், 4 ஆம் நூற்றாண்டு).**

எதியோப்பிக் என்பது பண்டைய எழுத்துக்களில் ஒன்றாகும். எதியோப்பியா ஆபிரிக்காவில் அதன் சொந்த எழுத்துக்களைக் கொண்ட ஒரே நாடு ஆகும். அதில் 300 இற்கும் மேற்பட்ட எழுத்துக்கள் உள்ளன. எதியோப்பியாவின் எண்கள் (எதியோப்பிக் எண்கள்) கண்ணைக் கவரும் வடிவத்தைக் கொண்டவை.


குறிப்பாக, எழுத்துப் போன்ற குறியீடுகளுக்கு மேலேயும் கீழேயும் உள்ள கோடுகள் உரோம எழுத்துக்களின் சாயலைக் நினைவூட்டும். இருப்பினும், கோடுகளுக்கு இடையில் உள்ள குறியீடுகள் உரோம எழுத்தைச் சேர்ந்தவை அல்ல.

அவ்வெழுத்துக்கள் எதியோப்பிக் என்று தோன்றுவதாக குறிப்பிடப்பட்டாலும் பாதி மட்டுமே எதியோப்பிக் எழுத்துக்களுடன் ஒத்துப்போகின்றன. மற்றயவை புரிந்துகொள்ள முடியாத வகையில் உள்ளன என்று கூறப்படுகிறது. இவ்வெண்கள் 3 ஆம் 4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இவ்வெண்கள் 15 ஆம் நூற்றாண்டில் மறுசீரமைக்கப்பட்டன. எண் வடிவங்களும் உதாரணங்களும் உரு- 21 இல் காட்டப்பட்டுள்ளன. (999=900+90+9,999 எனும் எண்ணுக்கு 9 இற்குரிய குறியீடும் அதனை அடுத்து 100 இற்குரிய குறியீடும் 90 இற்குரிய குறியீடும் 9 இற்குரிய குறியீடும் இடப்படுகின்றன).

**ஜோர்ஜிய எண்கள் (Georgian numerals)**

ஜோர்ஜிய நாட்டில் பேசப்படும் மொழியான ஜோர்ஜிய மொழியில் பயன்படுத்தப்படும் எண் பெயர்களின் முறைமையே ஜோர்ஜிய எண்கள் ஆகும். 30 முதல் 99 வரையிலான ஜோர்ஜிய எண்கள் 20 அடி (base 20) முறையைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டுள்ளன. இது பாஸ்க் (Basque) பிரெஞ்சு மொழியில் 80 முதல் 99 எண்களுக்குப் .பயன்படுத்தப்படும் முறையைப் போன்றது.

தற்கால ஜோர்ஜிய நூல்களில் உள்ள எண்களுக்கான குறியீடுகள் ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படும் அரபு எண்களாகும், இருந்தாலும், தசம பிரிப்பானாக கால் புள்ளி (comma) பயன்படுத்தப்படுகிறது. மேலும் அதிக எண்ணிக்கையில் உள்ள இலக்கங்கள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அல்லது முற்றுப்புள்ளி இடப்பட்டு எண்களை எழுதுவதற்கான ஒரு பழைய முறை உள்ளது. இதில் ஜோர்ஜிய எழுத்துக்களின் பெரும்பாலான எழுத்துக்கள் (சில வழக்கற்றுப்போன எழுத்துக்கள் உட்பட) ஒவ்வொன்றுக்கும் ஒரு எண் பெறுமானம் (numerical value) ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த முறைமையில் உள்ள எண்ணியல் மதிப்புகள் கூறு எண்களை எளிமையாக சேர்ப்பதன் மூலம் பெறப்படுகின்றன. அவை இடமிருந்து வலமாக எழுதப்படுகின்றன. இவற்றை உரு-22 காட்டுகிறது. (உதாரணம் 1887=1000+800+80+7; 1887 எனும் எண்ணுக்கு 1000 இற்குரிய குறியீடும் 800 இற்குரிய குறியீடும் 80 இற்குரிய குறியீடும் 7 இற்குரிய குறியீடும் இடப்படுகிறது. 2012 எனும் எண்ணுக்கு 2000 இற்குரிய குறியீடும் 10 இற்குரிய குறியீடும் 2 இற்குரிய குறியீடும் இடப்படுகின்றது.)




உரு 22 ஜோர்ஜிய எண்கள் (Georgian numerals)

**கோதிக் எண்கள் (Gothic Number) (கி.பி.4 ஆம் நூற்றாண்டு).**

கோதிக் எழுத்துக்கள் கோதிக் மொழியை எழுத பயன்படும் எழுத்துக்கள். கி.பி.4 ஆம் நூற்றாண்டில் பைபிளை மொழி பெயர்க்கும் நோக்கத்திற்காக பிஷப் உல்பிலாஸ் இதை உருவாக்கினார். எழுத்துக்கள் அடிப்படையில் கிரேக்க எழுத்துக்களின் முற்கால சதுர வடிவங்களைப் பயன்படுத்துகின்றன, கோதிக் ஒலியியல் வெளிப்படுத்த சில கூடுதல் எழுத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இவ் எண் முறை கிரேக்க எண் முறைக்கு ஒத்ததாகும். எண் முறைமைகள் உரு-23 இல் காட்டப்பட்டுள்ளது. உதாரணம் 999 எனும் எண்ணுக்கு 900 இற்குரிய குறியீடும் 90 இற்குரிய குறியீடும் 9 இற்குரிய குறியீடும் இடப்படுகின்றன.




உரு -23 கோதிக் எண்கள் (Gothic Number)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27 பேர்...

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14,399 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## எரிவாயு அடுப்பு...

துள்ளதாக பிரதேசவாசி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எரிவாயு அடுப்பில் சமையல் செய்துவிட்டு காஸ் அடுப்பினை நிறுத்தி வைத்த தன் பின்னர் திடீரென தீ பிடித்து காஸ் அடுப்பு ஒளிவிட்டு வெடித்ததாகவும் கூறினார். (ம-3,299)

## +735...

தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 565,468 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## காணி உரிமை...

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நேற்று யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

காணி உரிமையாளர் மற்றும் உத்தியோகத்தர்களை தனித்தனியாக சந்தித்து கலந்துரையாடிய வடக்கு மாகாண ஆளுநர் காணி உரிமம் தொடர்பில் கேட்டறிந்தார்.

சிலருடைய காணிகளுக்கான சட்டரீதியான உரிமங்கள் இல்லாமை ஆளுநரால் அவதானிக்கப்பட்ட நிலையில் குறித்த விடயம் தொடர்பில் சங்கானை மற்றும் தெல்லிப்பளை பிரதேச செயலாளர்களை நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல் வழங்கினார். (ம-3,33)

## "ஆரியகுளம்...

யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனின் "தூய நகரம்" திட்டத்திற்கு அமைவாக தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகர் வாமதேவா தியாகேந்திரனின் பெரும் நிதிப் பங்களிப்பில் புனரமைக்கப்பட்ட "ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல்" திறப்பு விழா நேற்று வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது.

யாழ்.மாநகர முதல்வர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா பிரதம விருந்தினராகவும் தியாகேந்திரனின் பிள்ளைகளான தியாகேந்திரன் அர்ச்சுனா மற்றும் நிலாஜினி தியாகேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

விழாவில் ஆரியகுளத்தின் வரலாற்றை எடுத்துக்கூறும் வகையில் நினைவுக்கல் மூன்று மொழிகளிலும் திறந்து வைக்கப்பட்டது. ஆரியகுளம் பெயர் பொறிக்கப்பட்ட எழுத்துருவை வடக்கு ஆளுநர், யாழ். மாநகர முதல்வர் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

வாணவேடிக்கைகள் கண்களைக் கவரும் வகையில் அமைந்திருந்ததுடன் தண்ணீர் விசிறல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மேற்படி விழாவில் மதத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், யாழ்.மாநகர சபையின் ஆணையாளர், மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர சபை உத்தியோகத்தர்கள், பல்வேறு துறைசார்ந்தவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். வாமதேவா தியாகேந்திரன் வெளிநாடு சென்றமையால் குறித்த நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை.

(ம-3,18,33,104)

## யாழில் தொடர்...

யில் நேற்று மேலும் இரண்டு சடலங்கள் கரையொதுங்கியுள்ளன.

யாழ்ப்பாணம், வடமராட்சி, பருத்தித்துறை - சக்கோட்டை கடற்கரையில் நேற்று நண்பகல் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று கரையொதுங்கியது.

இந்நிலையில் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுண்டிக்குளம் - பூணைத்தொடுவாய் பகுதி கடற்கரையில் மேலும் மாலை ஒரு சடலம் கரையொதுங்கியுள்ளது.

முன்னதாக கடந்த ஒரு வார காலத்திற்குள்ளாக மேலும் நான்கு சடலங்கள் கரையொதுங்கிய நிலையில் நேற்று மேலும் இரண்டு சடலங்கள் இவ்வாறு கரையொதுங்கியுள்ளன.

நெடுந்தீவு, மணல்காடு, வல்வெட்டித்துறை ஆகிய பகுதி கடற்கரைகளில் குறித்த மூன்று சடலங்கள் கரையொதுங்கியிருந்தன. (ம-3,18,33,60,104,316)

## நல்லூர் கோவில்...

யில் ஓடிச்சென்று முன்னால் இருந்த வர்த்தக நிலையத்தினரை அழைத்துள்ளார்.

இதன்போது உடனடியாக ஓடிச் சென்ற வர்த்தக நிலையத்தினர் எரிவாயு சிலிண்டரை அகற்றி தீயை அணைத்தமையினால் பாரிய சேதங்கள் எதுவும் ஏற்படாது தடுக்கப்பட்டுள்ளது.

(ம-3,18,33,101)

## ஆஸி உயர்ஸ்...

சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பு நேற்று பிற்பகல் 4 மணிக்கு யாழ்ப்பாண மாநகர சபையில் இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பில் யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளர் இ.ஜெயசீலனும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3,18,33)

## இந்திய உயர்மட்ட...

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவாலையும் இந்திய பெற்றோலிய வளத்துறை அமைச்சரையும் அமைச்சர் பசில் ராஜபக்ஷ சந்தித்துள்ளார்.

இதேவேளை, நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று முன்தினமும் இந்திய நிதியமைச்சரை சந்தித்து கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கடினமான...

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கு எசிதிசி காப்புறுதி பத்திரத்தை வழங்கும் நிகழ்வில் உரையாற்றியபோதே பிரதமர் இதனைக் கூறினார்.

ஊடகங்களால் அரசாங்கமொன்றை உருவாக்க முடியும். எனினும், அரசாங்கத்தை பாதுகாக்க முடியாது எனக் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தில் உள்ளவர்களால் அரசாங்கத்தை பாதுகாக்க முடியுமே தவிர, ஊடகங்கள் அரசாங்கத்தை பாதுகாக்க முயன்றால், தற்போது வழங்குவதைவிட பெரிய காப்புறுதியை வழங்க வேண்டியேற்படும் என பிரதமர் சுட்டிக்காட்டினார்.

பிரபல்யமான தீர்மானங்களை எடுப்பதற்கு பதிலாக கடினமான தீர்மானங்களை எடுக்க வேண்டிய காலத்தையே தமது அரசாங்கம் எதிர்கொண்டுள்ளதாகவும் அவ்வாறான கடினமான தீர்மானங்களை எடுப்பதற்கும் தாம் தயாராக இருப்பதாகவும் பிரதமர் கூறினார். (ம-3)

## சூரிய...

இந்த வேலைத் திட்டம் சம்பந்தமாக மூன்றாம் தரப்பு ஒன்றிலிருந்து எழுந்துள்ள பாதுகாப்பு கரிசனை கருதி இந்த வேலைத் திட்டம் இடைநிறுத்தப்படுவதாக அந்த டுவிட்டர் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நெடுந்தீவு, அனலைதீவு மற்றும் நயினாதீவு ஆகிய இடங்களில் இந்தச் சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கான வேலைத் திட்டத்தைச் சீனா முன்னெடுக்கவிருந்தது.

இதற்கான அமைச்சரவை அனுமதியும் வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக இந்தியா தனது [illegible]

டுள்ளதுடன் தமிழ் அரசியல் கட்சிகளும் இதற்கு எதிர்ப்பினை வெளிப்படுத்தின.

இந்த நிலையில் தற்போது இந்த வேலைத் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சீனா அறிவித்துள்ளது. (ம-3)

## ஒமிக்ரோனைத் தடுக்க ஆலோசனைகள் முன்வைப்பு

(கொழும்பு)

ஒமிக்ரோன் கொரோனா திரிபு நாட்டுக்குள் நுழைவதை தடுக்கும் வகையில், இலங்கைவரும் அனைவரையும் விமான நிலையத்தில் கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்துமாறு இலங்கை மருத்துவ சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் வைத்தியர் பத்மா குணரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு வருவதற்கு 72 மணித்தியாலங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனைக்கு மேலதிகமாக, நாட்டுக்கு வருகைதந்த பின்னரும் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (ம-3)

## முறைப்பாட்டு...

தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கமைய 011 5811927 மற்றும் 011 581 1929 ஆகிய தொலைபேசி இலக்கங்களை தொடர்பு கொண்டு எரிவாயு தொடர்பான பிரச்சினைகளை அறிவிக்க முடியும். (ம-3)


தன நிதானய
திகதி - 2021.12.02
சீட்டிழுப்பு இலக்கம் - 634
M 01 25 51 78

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 02.12.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2899
G 11 26 31 59

மஹஜன சம்பத
திகதி 2021/12/02
சீட்டிழுப்பு இலக்கம் 4604
G 7 1 5 2 8 6

மெகா பவர்
திகதி 02/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0952
I 15 52 57 73 78

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 02/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1175
விருச்சிகம் 8 3 3 0 0 6

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1407
வர்ணம்: கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 02.12.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,220,340
23 44 53 69 Z

சனிதா
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3742
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 02.12.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,760,980
12 15 32 38 L

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1581
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 02.12.2021
தினம் வியாழன்
P 29 40 43 48
அடுத்த சுப்பர் ஜக்பொட்: 72,800,666/=

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,565,546/=
திகதி 02.12.2021
வெற்றி வாரம் 3293
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 16 43 48 62 மீனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,343,380/=

சம்பர்தன வாசனாவ
திகதி: 2021-12-02
வெற்றி வாரம்: 464 | வர்ணம்: சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ. 11,206,968/-
Q 04 12 10 4
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,478,880/-
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 11,326,920/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேக்கரி பொருட்களுக்கான கேள்வியில் வீழ்ச்சி

பேக்கரி உற்பத்தி பொருட்களுக்கான கேள்வியில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது என பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பாணின் விலை 10 ரூபாயினாலும் ஏனைய பேக்கரி உற்பத்திகளின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு விலை அதிகரிப்பு அறிவிக்கப்பட்டது முதல் பாண் மற்றும் பேக்கரி உற்பத்திகளுக்கான கேள்வி குறைந்துள்ளது. (ம-03)


## அகமகிழ்ந்து நன்றி தெரிவிக்கிறோம்



பூநகரி பிரதேச பாடசாலைகளான
கிளி / பூநகரி மகா வித்தியாலயம், கிளி / செல்லையாதீவு அ.த.க. பாடசாலை, கிளி / பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம், கிளி / முக்கொம்பன் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கற்பிக்கும் யாழ். மாவட்ட ஆசிரியர்களாகிய நாம் நீண்ட காலமாக பாடசாலை செல்வதற்கான முறையான அரச போக்குவரத்து சேவையின்றி தவித்த வேளையில் எமது கோரிக்கையை ஏற்று மூளாயிலிருந்து - சுழிபுரம் - சித்தன்கேணி - சங்கானை - சண்டிலிப்பாய் - மானிப்பாய் - உடுவில்- மருதனார்மடம் - சுன்னாகம் - மருதனார்மடம் - உரும்பிராய் - கோப்பாய் - கைதடி - சாவகச்சேரி - தனங்கிளப்பு - பூநகரி ஊடாக முக்கொம்பன் வரையான ஓர் அரச பேருந்து சேவையை ஏற்படுத்தித்தந்த
கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
அமைச்சரது பணிப்புரைக்கு அமைவாக இப்பேருந்து சேவையின் வழித்தட ஒழுங்கு, நேர ஒழுங்கு என்பவற்றை முறையாக ஏற்படுத்திக்கொடுத்த
ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர்
திரு. சி. **பாலகிருஷ்ணன்** (ஜீவன்) அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(8879)

**நன்றியுடன்**
**இப்பேருந்து சேவை மூலம் பயன்பெறும் ஆசிரியர்கள்**



**விரைவு பொதிகள் சேவை**
**V2 TRAVELS**
**UK-975 /=Kg**
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-3132)
0768226240 DHL



**உடனடி வேலை வாய்ப்பு**
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-3133)
சம்பளம் - 15000/-
0777-068-777



## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



**பிறப்பு: 02.10.1948**
**இறப்பு: 04.11.2021**

கடந்த 04.11.2021 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

திருமதி
**பரமநாதன் கனகாம்பாள்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் (01.12.2021) புதன் கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (03.12.2021) வெள்ளிக் கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து மதியபோசன நிகழ்வு **நல்லூர் துர்க்கா மணி மண்டபத்திலும்** நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

( இது ஓர் தனிப்பட்ட அழைப்பு. ) (8874)

இல. 37/11, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
077 744 8006
077 526 534[illegible]
குடும்பத்தினர்


# "அறக்கொடை அரசன்"

## தியாகேந்திரனுக்கு மாநகர சபையால் பட்டம் சூட்டி கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

"அறக்கொடை அரசன்" எனும் பட்டம் சூட்டி தியாகி அறக்கொடையின் நிறுவுனர் வாமதேவா தியாகேந்திரனுக்கு மாநகர சபையால் மதிப்பளிக்கப்பட்டது.



யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் "தூய நகரம்" திட்டத்திற்கு அமைவாக தியாகி அறக்கொடையின் நிறுவுனர் வாமதேவா தியாகேந்திரனின் நிதியுதவியுடன் சீரமைக்கப்பட்ட ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

ஆரியகுளத்தை அழகுபடுத்தும் வேலைத் திட்டத்தை தன் செலவில் முன்னெடுத்த தியாகி அறக்கொடையின் நிறுவுனர் வாமதேவா தியாகேந்திரனுக்கு "அறக்கொடை அரசன்" எனும் நாமம் சூட்டி மாநகர சபையால் மதிப்பளிக்கப்பட்டது.

தியாகேந்திரன் வெளிநாடு சென்றுள்ளமையால் அவரது மகன் மற்றும் மகள் குறித்த பட்டத்தை பெற்றுக்கொண்டனர் (ம-03,33)


**BARATHY**
பிரதான வீதி - சித்தன்கேணி
(சிவன் கோவில் அருகில்)
**O/L**
**DAY CLASS**
புதிய பிரிவு ஆரம்பம் - 6.12.2021
திங்கள் காலை - 8.00 மணி
எமது வழமையான தனித்துவமிக்க ஆசிரியர் குழுவினால்
சென்ற ஆண்டு போல் இவ் ஆண்டும் 60 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.
அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்.
(C-3147)
*Note:* மாலை நேர வகுப்பு தரம் 9,10,11 இற்கு மாத்திரம் புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன. 077 376 3511



**பொருளியற் கல்லூரி**
நாவலர் வீதி, யாழ்ப்பாணம். K.K.S வீதி, சுன்னாகம்.
(இரு இடங்களிலும்)
**A/L 2023**
**கலை – வர்த்தகம்**
பிரிவு - 2 ஆரம்பம்
நாளை 4.12.2021 சனிக்கிழமை
நீங்கள் நன்கு அறிந்த யாழ். மாவட்டத்தின் முன்னணி ஆசான்களினால்

| | |
|---|---|
| பொருளியல் | - R.தர்ஷன் |
| கணக்கீடு | - B.முகுந்தன் |
| வணிகக் கல்வி | - S.பிரதீபன் |
| I.C.T | - R.சுதர்சன், S.விதுஷன் |
| தமிழ் | - N.சத்தியவேந்தன் |
| இந்துநாகரீகம் | - P.ஜோதீஸ்வரன், A.மேனன் |
| புவியியல் | - P.S.குமரன் |
| அரசியல் | - S.கோகுலன் |
| வரலாறு | - K.சுதன் |
| ஊடகவியல் | - N.கஜிதரன் |
| அளவையியல் | - S.சயந்தன், N.ஜெயசுரேஸ் |
| நாடகம் | - T. ஜெயசுதன் |
| விவசாயம் | - S.சஜீவன் |
| கிறிஸ்தவம் | - A.யுபின்சன் |
| இந்துசமயம் | - A.மேனன் |
| சித்திரம் | - S.சபேசன் |
| சங்கீதம் | - S.குமுதினி |
| மனைப்பொருளியல் | - K.றஜீதா |
| ஆங்கிலம் | - N.நிஷாந்தன் |

(C-3148)
நீங்கள் விரும்பிய இடங்களில் அனுமதிகளை பெற்றுக்கொள்ளலாம்


# பஸ் கட்டணங்களை அதிகரிக்க முடியாது

## அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி

(கொழும்பு)

தனியார் பஸ் கட்டணங்களை அதிகரிப்பதானது, இந்த சந்தர்ப்பத்தில் முடியாது என போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஜனவரி மாதத்திலிருந்து பஸ் கட்டணங்களை அதிகரிக்கவுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் முன்வைத்துள்ள கோரிக்கை தொடர்பில் பதில் அளிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

நாளாந்தம் அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிப்புக்கு மத்தியில் பொதுமக்கள் பாரிய நெருக்கடிகளை சந்தித்துள்ள நேரத்தில் அவசரஅவசரமாக பஸ் கட்டணத்தில் திருத்தம் செய்ய முடியாது.

பஸ்களுக்காக நிவாரணங்கள் வழங்கும் விசேட வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுவதால், அதற்கான விசேட நிவாரணம் எதிர்வரும் நாட்களில் அறிமுகப்படுத்தப்படும் என்றார். (ம-03)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
**ஆகாஸ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (8867)
076 825 7716 (ஆகாஸ்)



**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம், மயிலிட்டி, B.C றோட் சாந்த சந்தி அருகாமையில் மெயின் றோட்டுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
076 890 9259
077 015 0353
(8880)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org